Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது வைகாசி 10 ஆம் நாள் துல்ஹஜ் 29 (24-5-63) வெள்ளிக்கிழமை இதழ் 103

# 'ஸ்ரீ' எதிர்ப்பு முற்ருக கைவிடப்படலாம்

## நீதிமன்றத்தீர்ப்பின் எதிரொலி

யாழ்ப்பாணம், வெள்ளி

**சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு இயக்கத்தை தமிழரசுக் கட்சி இனி முற்ருகக் கைவிட்டுவிடும் எனத் தெரியவருகிறது. தமிழ்மக்கள்மீது சிங்களத்தை வலுக்கட்டாயமாகத் திணிக்கும் ஒரு நடவடிக்கையாகவே மோட்டார் கார் இலக்கத் தகட்டில் சிங்கள 'ஸ்ரீ' எழுத்துப் பொறிக்கப்பட்டதெனக் கருதி 'ஸ்ரீ' எதிர்ப்பு இயக்கத்தை தமிழரசுக்கட்சி ஆரம்பித்து நடத்திவந்தது.**

சிங்கள 'ஸ்ரீ' இயக்கத்தை அரசாங்கம் சட்டமூலம் எதிர்த்து நடவடிக்கை எடுத்தது. நீதிமன்றத்தில் வாதாடி சிங்களத் திணிப்பை எதிர்த்து நடவடிக்கை எடுக்க தமிழரசுக்கட்சி தீர்மானித்து நீதிமன்றத்தில் 'ஸ்ரீ' வழக்குகளில் வாதாடியது.

சமீபத்தில் மூன்று சிங்கள 'ஸ்ரீ' வழக்குகளில் நீதிபதி எதிரிகளைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பளித்துள்ளது தமிழரசுக்கட்சி வட்டாரங்களில் ஏமாற்றத்தைக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. சிங்களத்திணிப்பை எதிர்த்து பார்லிமெண்டில் எடுக்கும் நடவடிக்கைகள் பயனளிக்காமல் போனதுடன் நீதிமன்றத்திலும் பயன் கிடைக்கத் தவறிவிட்டதால் இனி நேரடி இயக்கங்கள் மூலமே முயற்சி செய்யவேண்டுமென்று தமிழரசுக்கட்சி வட்டாரங்கள் கருதுகின்றன. நேரடி இயக்கத்துக்கு முன்னேடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ள எல்லாம் தமிழ் இயக்கமே சிங்களத் திணிப்பை சரியான முறையில் எதிர்க்கக்கூடிய ஆயுதம் என்று தமிழரசுக்கட்சியினர் கருதுகின்றனர். எல்லாம் தமிழ் இய[illegible]கத்தை கிராமம் கிராமமாகவும் வீடு வீடாகவும் விஸ்தரித்து வலுப்படுத்துவதுபற்றி தமிழரசுக்கட்சியினர் ஆலோசனை செய்துவருகின்றனர்.

## காரியப்பருக்கு ரூ. 50 அபராதம்!

யாழ்ப்பாணம், வெள்ளி

"நீர் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தராயிருப்பதால் முன்மாதிரியாக நடந்திருக்கவேண்டும். மேலும் சம்பவம் நடந்த தினம் போக்குவரத்துகள் முறையாக நடக்கின்றனவா என்பதைப் பார்வையிடும் கடமையில் இருந்திருக்கிறீர். அவ்விதம்கடமையிலிருந்தபொழுது நீர் கவலையீனமாயிருக்கமுடியாது. செல்வரத்தினத்தைப் போகவிட்டுப் பின் நீர் போயிருக்கலாம். வீதியின் கரையில் குழிநீரிருந்தாலும் உமது உடுப்புகள் பழுதுருது குழிக்கரைக்கு இன்னும் தூரம் போகக்கூடிய இடமிருந்தும் போகாது விட்டது குற்றமே. நீர் இடது பக்கத்தால் போகாததால் குற்றவாளியே. அதற்கு அபராதம் 50 ரூபா விதிக்கிறேன்.

இவ்வாறு யாழ்ப்பாணம் கூட்டு மாஜிஸ்திரேட் திரு. வி. எம். குமாரசாமி, சென்ற 27-10-61-ல் தற்போது மன்ஞர் பொலிஸைச் சேர்ந்தவரும் சம்பவம் நடந்தபொழுது யாழ்ப்பாணம் பொலிஸில் கடமையாற்றியவருமான சப்-இன்ஸ்பெக்டர் திரு. எம். ஜே. காரியப்பர் பகிரங்க வீதியில் ஒழுங்கு முறைப்படி இடதுகைப் புறமாக மோட்டார்சைக்கிளைச் செலுத்தாது வலதுபுறத்தால் போய் மோட்டார் சைக்கிளில் வந்த திரு. எம். செல்வரத்தினத்தின் மோட்டார்சைக்கிள் மீது மோதி அவரைக் காயப்படுத்தியதாக யாழ்ப்பாணம் பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நேற்றுத் தீர்ப்பளிக்கும்போது கூறினர்.

## உணவு உபமான்ய தொகை அதிகரிப்பு

கொழும்பு, வியாழன்

அடுத்த பிஸ்கால் வருடத்துக்கான (1963-64) உணவு உபமான்ய தொகை கடந்த வருடங்களைவிட அதிகமாக இருக்குமென அறியப்படுகிறது.

அரசாங்க நெல் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் உள்ளூரில் உற்பத்தியாகும் நெல்லுக்கு அதிக விலை கொடுப்பதாலும் சீனியின் உலக மார்க்கட் விலை. உயர்ந்திருப்பதைத் தொடர்ந்தே இவ்வித உணவு உபமான்ய தொகை அதிகமாகும் என நம்பப்படுகிறது.

எதிர்வரும் வருடத்தில் உள்ளூர் நெல் உற்பத்தி 70 லட்சம் புசல் அதிகரிக்கப்படும் என காணி நீர்ப்பாசன மந்திரி திரு. ஸி. பி. டி. சில்வா தெரிவித்துள்ளார்.

### உற்பத்தி அதிகரிப்பால் ரூ. 5 கோடி நஷ்டம்

இந்த நெல் உற்பத்தி அதிகரிப்பால் அரசாங்கம் ரூ. 5 கோடிவரை நஷ்டமடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெருவெள்ளம் ஏற்படலாம்!

கொழும்பு, புதன்

தென்மாகாணத்தில் பெரும் வெள்ளம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. காலி, மாத்தறைப் பகுதிகளில் மரங்கள் விழுந்துகிடப்பதால் கரையோரப் பகுதிகளுக்கான ரயில்சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. பெருமழை, வெள்ளம் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் ஆயிரத்துக்குமதிகமானவர்கள் வீடிழந்துள்ளனர்.

## எதிரிகள் எச்சரித்து விடுதலை

### 'ஸ்ரீ'வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

மோட்டார் வாகனங்களில் மோட்டார் பதிவுக்காரியஸ்தரால் கொடுக்கப்பட்ட அடையாள இலக்கத்தொடரிலுள்ள சிங்கள ஸ்ரீ எழுத்தை மறைத்ததாக யாழ்ப்பாணம் பொலிஸ் போக்குவரத்து இன்ஸ்பெக்டர் திரு. பீட்டரினுல் திரு. அ. சகாதேவன், திரு. த. துரைச்சாமி, திரு. கி. நடராசா ஆகியோர்மீது தொடரப்பட்ட வழக்குகளில் எதிரிகள் தாம் குற்றவாளிகள் என்றதனுல், அவர்கள் யாழ்ப்பாணம் கூட்டு மாஜிஸ்திரேட் திரு. வி. எம். குமாரசாமியினுல் எச்சரிக்கை செய்து விடுதலைசெய்யப்பட்டனர்.

இவ்வழக்குகளில் இன்று வழக்கறிஞர்களின் தொகுப்புரை கேட்பதாகவிருந்தது. வழக்குகளில் உள்ள குற்றச்சாட்டின்படி எதிரிகளைக் குற்றவாளிகளாகவே காணத்தீர்மானித்துவிட்டதாகவும் அதே குற்றஞ்சாட்டியிருந்த இதற்கு முந்திய வழக்கில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டமாதிரியே [illegible] நடவடிக்கை மேற்கொள்[illegible]தாகவும் கூட்டுமாஜிஸ்திரேட் திரு. வி. எம். குமாரசாமி எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளையிடம் கூறினர்.

திரு. கதிரவேற்பிள்ளையும் அதற்கிணங்கவே எதிரிகள் தாம் குற்றவாளிகள் என அறிவித்தனர்.

## அரசாங்க கட்சியில் சேருவர்?

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா, நிந்தவூர் எம். பி. திரு. மஜீத், பொத்துவில் எம். பி. திரு மஜீத் ஆகியோர் அரசாங்க கட்சியில் சேரவிருக்கிருர்களெனத் தெரியவருகிறது. இதுசம்பந்தமாக கல்முனை எம். பி., அஹமட் தெரிவிக்கையில், இந்தவித யோசனை தமக்கு இல்லையென்றும் இது பற்றி எதுவும் தமக்குத்தெரியாதென்றும் கூறினர்.

## சுமார் $4\frac{1}{4}$ கோடி பெறுமதியான சிறுகைத்தொழில் உற்பத்திகள்

### குடிசைக்கைத்தொழில் பகுதி அதிபரின் 60-61 வருட அறிக்கை

கொழும்பு, வியாழன்

**1960-61-ம் ஆண்டிற்கான நிதிவருடத்தில் கிராம முன்னேற்றச் சங்கங்களும், தனிப்பட்டவர்களும் உற்பத்தி செய்த சிறுகைத்தொழில் பொருள்கள், கிராமமுன்னேற்ற, குடிசைக் கைத்தொழில் பகுதிமூலம் சுமார் நாலரைக் கோடி ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டதாகவும், இத்தொகையில் சுமார் 1 கோடிரூபா உற்பத்தி செய்தவர்களுக்கு சம்பளமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தனது 1960-61-ம் நிதி ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் கிராம முன்னேற்ற குடிசைக் கைத்தொழில் பகுதி அதிபர் திரு. எம். எஸ். பெரேரா தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட நிதி வருடத்தில் சுமார் மூன்றரைக்கோடி ரூபா பெறுமதியான கைத்தறித்துணிகள் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது.**

உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறித் துணிகளில் கைத்தறி உற்பத்திச் சட்டத்தின் கீழ் 351 லட்சம் ரூபாவிற்கு விற்கப்பட்டதாகவும் 69 லட்சம் ரூபாவிற்கு அரசாங்க இலாகாக்களுக்கு, அரசாங்க திட்டத்தின்கீழ் விற்கப்பட்டதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கைத்தொழில்பயிற்சி

10,000 இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் கைத்தொழில் பயிற்சி அளிக்கப்பட்டதாகவும் கைத்தெறி நெசவு, மட்பாண்ட வேலைகள், மரவேலைகள், தும்பு, பிரம்பு கைத்தொழில்கள் விளையாட்டுச் சாமான்கள் பொம்மைகள் முதலியன உற்பத்தி செய்வதுபற்றியே 448 பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டதாக அறிக்கை தெரிவிக்கின்றது பயிற்சியை முடித்துக் கொண்டவர்கள் ஐக்கிய சங்கங்களாகச் சேர்ந்து தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கு ஊக்கமளிக்கப்பட்டதாகவும் நாட்டில் இலாகாவின்கீழ் 1458 கூட்டுறவுகைத்தொழில் சங்கங்கள் உள்ளதாகவும் இவற்றில் 25000 நெசவாளர்களைக் கொண்ட 973 நெசவு சங்கங்கள் இருப்பதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது.

குறிப்பிட்ட நிதிவருடத்தில் 20 லட்சம் ரூபா கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கடன் வழங்குவதற்கென அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஒதுக்கப்பட்ட தொகையின் காலபகுதியாகிய 503,100 ரூபாவே கடன் வழங்கப்பட்டுளளதாகவும் அறிக்கை குறிப்பிடுகின்றது.

**எச். எஸ். ஸி.**

**பல்கலைக் கழக புகுமுக வகுப்பு**

இலங்கையில் சிறந்த, நவீன முறையில் சகல கலைப்பகுதி, விஞ்ஞானப் பகுதிப் பாடங்களும் ஆங்கிலத்திலும் தமிழிலும் தபால் மூலம் போதிக்கப்படும்.

விபரங்களுக்கு:

**யூனிட்டட் இன்ஸ்டிடியூட்ஸ்**

நெல்லியடி, கரவெட்டி.

**வரி விளம்பரம்**

**தொய்வு: நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் குருநகர் அர்ச். சந்தியோகுமையோர் கோவில் வளவில் முதிர்ந்த இரண்டு மலைவேப்பமரங்கள் விற்பனைக்கு உண்டு.

விபரம் அறியவிரும்புவோர் மேற்படி கோவில் கட்டளைக் குருவானவரிடம் 26-5-63 ஞாயிற்றுக்கிழமைக்கு முன் நேரில் அறிந்துகொள்ளவும். 1106

**விற்பனைக்கு**

C. E. 4865 இலக்கமுடைய டொச் லொறி விற்பனைக்கு இருக்கிறது. தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம். 657 கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். 1111

**விற்பனைக்கு**

கந்தரோடை, கலட்டியில் கயற்கண்ணி என்ற காணியில் 15 பரப்பு விற்பனைக்கு உண்டு. தேவையானோர் விலை விபரங்களுடன் திரு. தி. சிவகுருநாதன், கந்தரோடை, சுன்னாகம் என்ற விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். 1114

**கல்வி**

சிங்களம் படிக்க விரும்புகிறீர்களா? ஆரம்பக் கல்வி தொடக்கம் ஓய்வு நேரத்தில் பாடம் கற்கவேண்டுமானால் உடன் தொடர்பு கொள்ளவும். எம். எட்மன் கூரே, 99, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1116

**பாராட்டுவிழா**

மண்டைதீவுக் கிராமாதிகாரியாகக் கடமையாற்றி இளைப்பாறும் திரு. முத்துக்குமாரு நவரத்தினராசா அவர்களின் இருபத்துநான்கு வருடசேவை நலம் பாராட்டுமுகமாக ஓர் உபசாரக் கூட்டம் 25-5-63 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் சிறுப்புலம் வடக்கு வீதியில் நடைபெறும். தீவுப் பகுதிக் காரியாதிகாரி திரு. சாமுவேல் தம்பையா தலைமை வகிப்பார். அம்மன் கோவிலிலிருந்து சிறுப்புலம் கந்தசாமி கோவில் மைதானம்வரை ஊர்வலம் நடைபெறும். இவ்விழாவில் திரு. கைலாசபிள்ளை (ஜே. பி.), யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசு வால்டன், தீவுப்பகுதி எம். பி. திரு. வி. ஏ. கந்தையா, யாழ். எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா, திரு. ஏ. எஸ். மரியநாயகம் (ஏ. எஸ். பி.) மற்றும்பலரும் பாராட்டுரை வழங்குவர். திரு. க. அமிர்தலிங்கம் நன்றி கூறுவார்.

1020 மண்டைதீவுமக்கள்

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பல இடங்களில் பலத்த மழை

கொழும்பு, புதன்

சோழகக்காற்று ஆரம்பித்ததின் காரணமாக நாட்டின் பலபாகங்களிலும் பலத்த மழை பெய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்துகமவில் இதுவரை பெய்திராதவகையில் 7.26 அங்குல மழை 24 மணித்தியாலங்களாக பெய்திருக்கிறது.

காலி (8.65 அங்குலம்) கட்டுநாயக்கா விமான நிலையம் (2,21 அங்குலம்) இரத்மலானை விமானநிலையம் (2.11 அங்குலம்), நீர்கொழும்பு (2.38 அங்குலம்) கொழும்பு கோட்டை (2.05 அங்குலம்) களுத்துறை (2.57 அங்குலம்) ஆகிய இடங்களிலும் பலத்த மழை பெய்துள்ளது.

—

## பஸ்கள் தாமதம்

களுத்துறை, வியாழன்

பள்ளிக்கூடங்களில் படிக்கும் பள்ளிப் பிள்ளைகள் பல மணி நேரங்களாகக் கியூவரிசையில் காத்திருந்து கஷ்டத்திற்குள்ளாகவேண்டிய நிலைமை மத்துகம பஸ்நிலையத்திலேற்பட்டது. பள்ளிக்கூடங்கள் மீண்டும் ஆரம்பித்துவிட்டன என்பதை இ. போ. ச. மறந்துவிட்டதாகவோ அல்லது அலட்சியமாக இருப்பதாகவோ எண்ணத்தோன்றுகிறது. பள்ளிக்கூடங்களின் புதியநேர அட்டவணைகளின்படி ஒருநேரப் பள்ளிக்கூடங்கள் பி. ப. 1-30 மணிக்கும், மாலைநேரப் பள்ளிக்கூடங்கள் பி. ப 5-15 மணிக்கும் மூடப்படுகின்றன. இதற்கேற்ப பஸ் போக்குவரத்து அட்டவணைகள் திருத்தியமைக்கப்படாதபடியால் தாமதம்ஏற்பட்டு வருகின்றது.

—

## தபால் ஊழியருக்கு பாராட்டு விழா

வரணி, வியாழன்

வரணி உப தபாற் கந்தோர் ஊழியராக கடந்த 15 வருட காலம் கடமையாற்றிய திரு. சி. செல்லையா இளைப்பாறுவதை முன்னிட்டு, அவரது சேவையைப்பாராட்டும்முகமாக எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு வரணி இடைக்குறிச்சி கிராம முன்னேற்ற சங்க மைதானத்தில் ஒரு கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்திற்கு வரணி கிராமசபை தலைவர் திரு. நல்லமாப்பாணர் தலைமைவகிப்பார். முன்னை நாள் சாவகச்சேரி எம். பி. திரு; வி. குமாசாமி, வடபகுதி தலைமை தபால் அதிபர். திரு. ஆர். நகுலேஸ்வரன் சாவகச்சேரி தபாற்கந்தோர் அதிபர் திரு. வி. தியாகராசா மற்றும் பலரும், அவரது சேவையைப் பாராட்டி சொற்பொழிவாற்றுவார்கள்.

# "வீண்வாதம் வேண்டாம் நீச்சல் போட்டிக்கு வருக!"

## திரு. நவரத்தினசாமிக்கு ஆனந்தன் பதில்

யாழ்ப்பாணம், வியாழன்

இப்போது கடற்காற்றுமாறி இந்தியக்கரையை நீந்துபவர்கள் அடையமுடியாத நிலையில் இருக்கிறது. அவ்வாறிருந்தும் இந்தியக்கரையை அடைந்தாலும்சரி அடையாவிட்டாலும் சரி, இருவரில் ஒருவர் இறக்கும்வரை அல்லது முயற்சியைக் கைவிடும்வரை நீந்தத் தயாராக இருப்பதாக நீச்சல் வீரர் ஆனந்தன் நீச்சல்வீரர் வி. நவரத்தினசாமியின் இரண்டாவது சவாலுக்குப் பதிலளிக்குமுகமாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். திரு. ஆனந்தன் அந்த அறிக்கையில் மேலும் சொல்லியிருப்பதாவது:-

எனது மூன்று வருஷப் படிப்பில் இரு வருஷத்தின் பெரும்பகுதியை வீணாக்கிவிட்டேன். எஞ்சியுள்ள ஒருவருடகாலமாவது படிக்கவிரும்புகிறேன். எனவே எனது சவாலை திரு. நவரத்தினசாமி ஜூன் 20-ம் திகதிக்கு முன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

நான் பாக்கு நீரிணையைச் சிங்களவர்களுட்பட பலரின் முன்னிலையில் நீந்திக் கடந்தேன். என்னுடைய நீச்சலைப் பார்க்கவந்திருந்த கிங்ரோஸ் நீச்சற் கழகத்தைச் சேர்ந்த திரு. திஸ்ஸ ஆரியரத்தின பத்திரிகைகளில் எனது நீச்சலைச் கடைசிவரை பார்த்ததாகத் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் நாள் நான் நீந்துப்போது திரு. நவரத்தினசாமி இந்தியா சென்று பிடிபட்டது என் பிழையா? அவ்வாறிருக்க என்னைத் தன் முன்னிலையில் இன்னொருமுறை நீந்தச் சொல்கிறாரே. எதற்காக அவர் பொது மக்களை ஏமாற்றுகிறார்? இவ்வாறுசெய்வதினால் தன்னை மக்கள் மீண்டும் நினைவுகொள்ளட்டும் என்று எண்ணுகிறாரா?

நான் விடுத்த சவாலுக்குப் பதில் இன்னும் தரவில்லையே இருவரும் நீந்துவோம். நீந்தி, தன்னால் முடியுமானால் என்னைத் தோற்கடித்து அதன் மூலம் தான் பெறவிரும்பும் புகழைப் பெறட்டும். எதற்காகச் சுற்றிவளைத்துப் பதில் தரவேண்டும். பாக்குநீரிணையை இருமுறை நீந்திக்கடக்கத் தயாராக இருக்கும் திரு. நவரத்தினசாமி ஏன் எனது சவாலை ஏற்றுக்கொள்கிறாரில்லை?

எனது சவாலை ஏற்றுக்கொண்டால் இருவரும் நீந்துவோம். இதற்குமேலும் அவருடன் பத்திரிகைகள் வாயிலாக விவாதிக்கநான்விரும்பவில்லை.

பனுமாக்கால்வாயைப் பற்றி அவர் கூறிய 50.72 மைகள் என்பது உண்மையே. அகலம் 1500 அடிகளாகும். இதில் நீந்துவதனை அவர் சின்னதாகக் கூறுகிறார்.

வானவெளிக்கே மனிதரை அனுப்பிய துணிச்சல் மிக்க அமெரிக்காவிலுள்ள ஒருவரும் இன்னும் இந்தக் கால்வாயை நீந்த முயற்சிக்கவில்லையே, அது ஏன்?

பாக்கு நீரிணையைப்போலல்லாது பனுமாக்கால் வாயில் ஆள்விழுங்கிச் சுறுக்கள் அதிகம். பசுபிக் சமுத்திரச் சுறுக்கள் பனுமாக்கடலில் எப்போதும் கூட்டம் கூட்டமாகவே உலாவித்திரியும் ஆகையால் ஒவ்வொரு அடியும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நீந்தவேண்டும்.

பசுபிக் சமுத்திரத்தின் நீர் அளவும அத்திலாந்திச் சமுத்திரத்தின் அளவும் வேறுபட்டவை. இந்த நீர் அளவைச் சமனுக்குவதற்கு 7 லொக்கேட்ஸ் (Log Gates) இருக்கின்றன. நீந்தும் போது இந்த ஏழு இடங்களிலும் இந்த லொக்கேட்ஸை ஏற்றி நீர் அளவைச் சமனுக்கியே நீந்த வேண்டும்.

கப்பல்கள் நூற்றுக் கணக்கில் நாள்தோறும் அக்கால்வாயினூடாகச் செல்கின்றன. அப்போது கப்பலில் உபயோகித்த எண்ணெய் கால்வாயில் அப்புறப்படுத்தப்படும். எனவே பனுமாக்கால்வாய் முழுவதும் எண்ணெய் நிறைந்ததாகவே இருக்கின்றது. நீந்தும்போது பல தடவை இந்த எண்ணெய் நீரைக் குடித்தால் முயற்சியைக் கைவிடப் போதும். உபயோகித்துக் கழிக்கப்பட்ட எண்ணெய் நச்சுத்தன்மையுடையது என்பது அனைவருக்கும் தெரியும்.

நான் பாக்கு நீரிணையை நீந்தியபோது எந்தச் சந்தர்ப்பத்திலும் நீந்தவில்லை என ஒரு பத்திரிகையிலும், நான் பயிற்சி நீச்சலைக் கூட நீந்தவில்லையென மற்றொரு பத்திரிகையிலும் நான் நாகர்கோவிலிலிருந்து தொண்டமானாற்றுக்கு நீந்தியதனை வேறு ஒரு பத்திரிகையிலும் தெரிவித்துள்ளார். இதனை அவர் மறுப்பதனால் என்னுடைய பயிற்சி நீச்சலின் போது என்னுடன்கூட இருந்தவர்களிடமும் கரையில் இருந்து அவதானித்தவர்களிடமும் கூறட்டும். நாகர்கோவிலிலிருந்து தொண்டமானாற்றுக்கு 18 மைல்கள் தூரம். நான் நாகர்கோவிலுக்கு 4 மைல் அப்பால் நீந்த ஆரம்பித்தேன். இது பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்தியாகும்.

திரு. நவரத்தினசாமி 'கிறீஸ்' பூசிக்கொண்டு கட்டுமரத்தில் ஏறியதாகச் சொல்கிறார். அவர் கிறீஸ் பூசாமலே தான் என்னை நோக்கி நீந்தி என்னை வட்டமிட்ட பின்பு கட்டுமரத்தில் ஏறி கிறீஸ் பூசிக்கொண்டார். நல்லெண்ணம் உடையவரானல் அவர் கிறீஸ் பூசியபின் என்னுடன் நீந்தியிருக்கவேண்டுமே. அதற்கு மாறாக வள்ளத்திலிருந்த ஒரு புட்டி கிறிசைத் தானே பூசி முடித்துவிட்டு கட்டுமரக்காரருக்குத் தொந்தரவு கொடுத்துக்கொண்டிருந்தார். இதனுல் தான் அவர் வேறு வள்ளத்திற்கு மாற்றப்பட்டார். அன்றிரவு முழுவதும் அவர் தானாகவோ அல்லது மற்றவர் மூலமாகவோ அடிக்கடி என்னை தேடுதல் வெளிச்சம் போட்டு அவதானித்தார். இதனை சிறு வள்ளத்திலிருந்தவர்கள் கண்டனர். நான் நீந்த ஆரம்பித்த மறுநாள் பெரிய வள்ளம் இந்தியா நோக்கிச் சென்றபோது தானாகவே அவ்வளத்தில் ஏறினார். ஒருவேளை இப்போது 'நான் இந்திய அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து (நீந்திக் கொண்டிருந்தபோது) அவர்களைப் பிடிக்கச் செய்தேன்' என்று கூறக்கூடும்.

'களம்'ந்தைக் கடந்தால் நீரோட்டம் இந்தியா நோக்கியே மார்ச், ஏப்ரல் மாதங்களில் இழுந்துச் செல்லும். இதனை எந்த மீனவரைக் கேட்டாலும் சொல்வார்கள். நீரோட்டம் 'கள'த்திற்கு அப்பால் சாதகமாக இருக்குமானல் ஏன் தனக்கு முன் ஒருவரும் பாக்குநீரிணையை நீந்திக் கடக்கவில்லை? என்று கேட்கிறார். திரு. நவரத்தினசாமி நீரோட்டங்களைப் பற்றி முற்றும் அறிந்தவர். ஏனெனில் தனது இரண்டாவது முயற்சியில் பாக்குநீரிணையை நீந்திக்கடந்தவரல்லவா? வீண் விவாதத்தை நான் தொடர விரும்பவில்லை. என்னுடைய சவாலை ஏற்று என்னுடன் நீந்தட்டும். பகிரங்க மேடையில் சந்திக்கச் சொன்னார். நானும் சம்மதம் தெரிவித்தேன். ஆனல் அதற்கான முயற்சியைக் கணவில்லை.

—

## பங்களாக்களுக்கு வாடகை அதிகரிக்கும்

கொழும்பு, வியாழன்

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வசிக்கும் தங்குமிடங்களுக்கும், மந்திரிகள் வசிக்கும் பங்களாக்களுக்கும் வாடகை அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. தங்குமிடங்களுக்கும், பங்களாக்களுக்கும் வாடகைக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான தீர்மானம் ஒன்று அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இத்தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் வாடகை விகிதங்கள் அதிகரிக்கப்படும்.

—

தெதுருஓயா, வியாழன்

தெதுருஓயாவில் யானைவிரட்டும் வேலை அடுத்தமாதத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. வனபரிபாலன இலாகா இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

# 'சர்வாதிகார ஆட்சிவந்தால் இலங்கை ஒரு வியட்நாமாகிவிடும்'

களனி, வியாழன்

'சர்வாதிகார ஆட்சிமுறை இலங்கையில் கொண்டுவர வேண்டுமெனப் பலர் கூறிவருகிறார்கள். இவர்கள் கூறுவது போல் இலங்கையில் சர்வாதிகார ஆட்சி வந்தால் வியட்நாமில் இடம்பெறும் சம்பவங்கள் இங்கும் நிகழ ஆரம்பித்துவிடும்.'

இவ்வாறு வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தில் தென்வியட்நாமில் பௌத்தர்களுக்கெதிராக இடம்பெறும் சம்பவங்களை ஆட்சேபிக்குமுகமாக நடைபெற்ற மாணவர் கூட்டத்தில் திரு. ரொனி டி' மெல் பேசுகையில் கூறினர்.

திரு. டி. மெல் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வியட்நாம் அரசாங்கம் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் இசைக்கு ஆடிக்கொண்டிருக்கிறது.

அமெரிக்கர்கள் ஜனநாயகம் பற்றிப் பேசினலும் வியட்நாமில் பத்திரிகை தணிக்கை செய்யப்பட்டுள்ளது. வியட்நாமிலுள்ள உயர்தர அதிகாரிகளில் 80 சத வீதத்தினர் கத்தோலிக்கர்கள் என்பது ஏமாற்றத்தை அளிப்பதாகவிருக்கிறது.

தமது சொந்தநோக்கங்களை ஈடேற்றுவதற்காக சர்வாதிகார ஆட்சிபற்றிப் பேசுபவர்களின் பேச்சை நம்பி தவறான வழியில் சென்றுவிடவேண்டாமென நான் பிரதமரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

செனட்டர் ஓ. டி. ஜெயசேகரா பேசுகையில் ஒருநாட்டின் உள்விவகாரத்தில் தலையிட நமக்கு உரிமை இல்லை என்றாலும் நமதுசகோதரர்களின் ஜனநாயக உரிமைக்காக வாதாட நமக்கு உரிமை இருக்கிறது என்றார். கத்தோலிக்க இயக்கம்ஒருமதசார்பான இயக்கமல்ல அது ஒரு வகையான அரசாங்கம் என்றும் செனட்டர் ஜெயசேகரா குறிப்பிட்டார்.

**விலாச மாற்றம்**

கடந்த 20 ஆண்டுகளாக

யாழ்ப்பாணம் எஸ். சுப்பிரமணியம் அன்ட் கோ.

மருந்துக்கடையில் நிர்வாகஸ்தராக இருந்த

**(ஆயுர்) டாக்டர் எம். எஸ். சுந்தரம்**

அவர்களை

இனிமேல் கீழ்க்கண்ட விலாசத்தில் சந்திக்கலாமென்பதை அன்பர்கள் யாவருக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

**சுந்தரம் பிறதர்ஸ்**

மருந்துச் சரக்குகள், மருந்துகள்,

கோவில் அபிஷேக சாமான்கள் விற்பனையாளர்.

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(புதிய பஸ் நிலையத்திற்கு அருகாமை)

# "உதவிகண்டு அஞ்சுவோர் ஒப்பந்தத்துக்கு மறுப்பதேன்"

## பாகிஸ்தான் பற்றி நேரு

பஞ்சிம், மே 23

கோவா இந்திய யூனியனுடன் சேர்ந்தபின் முதல் தடவையாக கோவாவுக்கு விஜயம் செய்த பிரதமர் நேருவுக்கு கோவா மக்கள் வெகு உற்சாகமான வரவேற்பளித்தனர்.

பிரதமர் சென்ற பாதையில் அலங்கார வளைவுகளும் வரவேற்பு வளைவுகளும் அமைக்கப்பட்டிருந்தன.

பஞ்சியில் பொதுக்கூட்டமொன்றில் பேசிய பிரதமர் நேரு ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தினர்.

"பல்வேறு கலாசாரங்களையும் மொழிகளையும் கொண்டது இந்திய சமூதாயம். வேற்றுமையில் ஒற்றுமை என்பது அதன் சிறப்பு" என்று பிரதமர் நேரு கூறினர்.

கோவாவின் எதிர்காலம் பற்றி கோவா மக்களே முடிவு செய்யுமுன் கோவாவை எந்தப்பகுதியுடனும் இணைக்கும் யோசனை இல்லை என்று பிரதமர் சொன்னர்.

கோவா மொழியான கொங்கண மொழியை பேணி வளர்க்க வேண்டுமென்றும் நாட்டின் இதரபகுதிகளின் அபிவிருத்தித் திட்டங்களால் கோவாவும் கோவா மக்களின் ஒத்துழைப்பால் இதரபகுதிகளும் முன்னேற்றமடையும் என்றும்பிரதமர் கூறினர்.

சகிப்புத்தன்மைதான் எமது இலட்சியம் என்றாலும் ஆக்கிரமிப்பைச் சகித்துக் கொண்டிருக்கமாட்டோம் என்று பிரதமர் சொன்னர்.

சீனவினல் இந்தியாவுக்கு ஏற்பட்ட ஆபத்தான நிலைமையை பாகிஸ்தான் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு காஷ்மீர் முழுவதையும் தங்கள்வசமாக்கிச் கொள்ள முயற்சிக்கிறதென்றும் இது நடைபெற முடியாத ஆதாரமற்றயோசனையென்றும் திரு. நேரு கூறினர்.

"இந்தியாவுக்கு அந்நிய உதவி கிடைப்பதுபற்றிபாகிஸ்தான் ஏன் இப்படிக் கூச்சலிடுகிறதென்பது விளங்கிக் கொள்ள முடியாமலிருக்கிறது. அந்நிய உதவியினல் இந்தியா பாகிஸ்தான்மீது தாக்குதல் நடத்துமென்று அஞ்சுகிறார்களாம். ஆனல் 'போர்தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொள்வோம்' என்ற நமது யோசனையை அவர்கள் நிராகரித்து விட்டனர்" என்று பிரதமர் நேரு கூறினர்.

---

## முந்திரி ஆராய்ச்சி நிலையம்

திருவனந்தபுரம், மே 23

முந்திரி ஆராய்ச்சி நிலையமொன்று பாலகாட்டுக்கு அருகில் நிறுவப்படவிருக்கிறது.

---

## துருப்புக்களை விலக்கலாம்

### கென்னடி விளக்கம்

வாஷிங்டன், மே 23

சைகோன் அரசாங்கம் கேட்டுக்கொண்டால் தென்வியட்னமிலுள்ள அமெரிக்கத் துருப்புக்களில் ஒருபகுதியினரை விலக்கிக்கொள்வோம் என்று அமெரிக்க ஜனதிபதி திரு. கென்னடி நேற்று பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

---

## சீனி விலை உயர்வு

லண்டன், மே 23

உலகில் சீனியின்விலை இரண்டுமடங்காக அதிகரித்துள்ளது. ஒரு தொன் சீனி 100 வுணுயக உயர்ந்துள்ளது.

---

## தமிழ்க்கலாசாரம்

### உபராஷ்டிரபதி பாராட்டு

சென்னை, மே 23

படித்தவர்கள் நாற்காலி உத்தியோகத்தையே நம்பியிருக்கக்கூடாதென்றும் உடலுழைப்பில் கவனம் செலுத்தாதவரை எதிர்காலம் நம்பிக்கையளிக்காதென்றும் உபராஷ்டிரபதி டாக்டர் ஸாகீர்ஹுசெயின் நேற்று சென்னை கார்ப்பரேஷன் அளித்த வரவேற்புபசாரத்தில் பேசுகையில் கூறினர்.

ஆதாரக்கல்வியின் அவசியத்தையும் அவர் வற்புறுத்தினர்.

தமிழ்க்கலாசாரத்தை வெகுவாகப் புகழ்ந்து பேசிய உபராஷ்டிரபதி தமிழர்கள், தமிழ்க்கலாசாரம் இந்தியக் கலாசாரத்தின் ஒருபகுதிதானென்பதை மறந்துவிடக்கூடாதென்று கூறினர்.

---

## மாணவர்களுக்கு கட்டாயராணுவ பயிற்சி

புதுடில்லி, மே 22.

பல்கலைக்கழக மாணவர்களில் தேக திடமுள்ளவர்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்க பாரத அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

இப்பயிற்சி ஜூலை மாதம முதல் ஆரம்பமாகும். தேசிய கடற்படையையும் விரிவுபடுத்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

---

## மனிதனில்லாத மற்றொரு கிரகம்

மாஸ்கோ, மே 23

மனிதனில்லாத மற்றொரு செயற்கைக் கிரகத்தை சோவியத்யூனியன் நேற்று வானவெளிக்கு அனுப்பியது. வானவெளியில் 40 மைலுக்கும் 160 மைலுக்கும் இடையே இக்கிரகம் பூமியைச் சுற்றிவரும்.

---

## நியுயோர்க்கில் வரவேற்பு

நியுயோர்ச், மே. 23

அமெரிக்க வானவெளிவீரர் மேஜர் கூப்பர் நேற்று நியுயோர்க் நகருக்கு வந்தபோது அவருக்கு வீரவரவேற்பு அளிக்கப்பட்டது.

---

## புதிய கூப்பன் வழங்குவதில் தாமதம்

கொடிகாமம், வியாழன்

காணாமற்போன அல்லது எரிந்த கூப்பன்களுக்கு, புதிய கூப்பன் வழங்குவதில் காரியதிகாரி கந்தோரில் மாதக்கணக்கில் தாமதமேற்படுவதால் ஏழை மக்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

இதையிட்டு காரியாதிகாரி கந்தோர் உத்தியோகத்தர், விதானைமாரிடமிருந்து தகுந்த அத்தாட்சிப் பத்திரம் நேரத்திற்கு வந்து சேராததாலேயே தாமதமேற்படுவதாகத் தெரிவித்தார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் எரிந்த கூப்பன் துண்டுகளையும், மற்றும் தேவையான அத்தாட்சிப் பத்திரங்களையும் சாவகச்சேரி காரியாதிகாரி கந்தோரில் உடனடியாகக் கொடுத்தும் ஆறுமாத காலமாக புதிய கூப்பன் கிடைக்கவில்லையென்றும் இதற்காக பல தடவை தான் கந்தோருக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பியதாகவும் ஒருவர் தெரிவித்தார்.

---

## ஆஸ்பத்திரியில் மருந்து தட்டுப்பாடு

சாவகச்சேரி, வியாழன்

இங்குள்ள அரசினர் ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் எழுதிக்கொடுத்த அளவிலும் பார்க்க குறைந்த அளவான, மருந்துகளும், குளிசைகளும் கொடுக்கப்படுவதால் ஏழை நோயாளிகள் அதிக கஷ்டத்திற்குள்ளாகிறார்கள் என்று தெரியவருகிறது.

எட்டு நேர மருந்து கொடுக்கும்படி டாக்டர் எழுதினல் ஆறுநேர மருந்து கொடுப்பதாகவும், பத்து குளிசைகள் கொடுக்கும்படி எழுதினல் 5 குளிசைகள் கொடுப்பதாகவும் தெரியவருகிறது.

விலையுயர்ந்த சில குளிசைகள் இங்கு இல்லாத காரணத்தால், நோயாளிகள் வெளியிலுள்ள தனிப்பட்டவர்களின் மருந்துக் கடைகளில் அதிக விலை கொடுத்து குளிசைகள் வாங்குவதாகவும் அறியப்படுகிறது.

மருந்தின் அளவை குறைத்துக் கொடுப்பதால் நோயாளி ஒவ்வொரு நாளும் ஆஸ்பத்திரிக்கு வரவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனல் நோயாளிகளுக்கு, நோய் அதிகரிப்பதோடு வீண் செலவும் ஏற்படுவதாகவும் நோயாளி ஒருவர் தெரிவித்தார்.

---

## நிந்தாவூரில் சிறுபிள்ளைவாத தடுப்பு இயக்கம்

நிந்தாவூர், வியாழன்

நிந்தாவூர்ப்பகுதியில் சிறுபிள்ளை வாதத்தைத் தடைசெய்யும் முயற்சியில் சுகாதார இலாகாவினர் ஈடுபட்டுள்ளனர். இதுசம்பந்தமாக மக்களுக்கு அறிவுரை புகட்டுவதற்கும், அவர்கள் அரசாங்கத்தோடு எங்ஙனம் ஒத்துழைத்து இந்த நோயைப் பெருகாது தடை செய்யலாம் என்னும் வழிவகைகளைப் போதிப்பதற்கும் பெரிய அளவில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. திருக்கோவில் பகுதி சுகாதார சேவையாளர் திரு. எஸ். நாகலிங்கம் இந்தக் கடமைகளைச் செய்து முடிப்பதில் சிரத்தையுடன் பொறுப்பேற்று உழைத்து வருகிறார்.

---

## ஏ. பி. பெரேரா சீனவிற்குப் பயணம்

கொழும்பு, செவ்வாய்

சீனவின் இலங்கைத்தூதர் திரு. ஏ. பி. பெரேரா நேற்றைய தினம் பீக்கிங்கிற்குப் பயணமானர். சீனப் பிரதமர் திரு. சூ. என். லாயிடமிருந்து சீன—இந்திய எல்லைத்தகராறு பற்றிய பேச்சுவார்த்தை சம்பந்தமாக இலங்கைப் பிரதமருக்கு இவர் கடிதம் கொண்டு வந்திருந்தார். இம்மாதம் 14-ந் திகதி இவர் இலங்கைவந்திருந்தபின் பல தடவைகள் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை சந்தித்து எல்லைத்தகராறுபற்றிக் கலந்தாலோசித்தார்.

---

## முள்ளியில் வான் விபத்து

வரணி, வியாழன்

பிரயாணிகளை ஏற்றிவந்த 'மொறிஸ்' வான் ஒன்று மாட்டு வண்டியுடன் மோதியதால், பிரயாணி ஒருவரின் கைமுறிந்ததோடு, வானும் பாதை ஓரத்தில் சரிந்தது.

இச்சம்பவம் இன்று காலை முள்ளிக்கு அருகில் நடைபெற்றது. மற்றைய பிரயாணிகளுக்கு பலத்த காயம் ஏற்படவில்லை என்று தெரியவருகிறது.

---

# இந்தியாவுக்கு மேலும் அமெரிக்கராணுவஉதவி

## ஜனதிபதி கென்னடி அறிவிப்பு

வாஷிங்டன், மே 23

இந்தியாவுக்கு அமெரிக்கா மேலும் ராணுவ உதவியளிக்கும் என்று அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன் எப். கென்னடி நேற்றுப் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெவித்தார்.

சென்ற டிசம்பர் மாதத்தில் நஸ்ஸோவில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லனுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்திய பொழுது இந்தியாவுக்கு உதவி அளிப்பதுபற்றித் தாம் தெரிவித்ததை திரு. கென்னடி நினைவுபடுத்தினர்.

### டி. டி. கே. கருத்து

நேற்று வாஷிங்டனில் இந்திய பொருளாதார பாதுகாப்பு இணைப்மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றில் பேசுகையில் தமது அமெரிக்க விஜயம் நற்பயனளித்துள்ளதாகவே தாம் கருதுவதாகத் தெரிவித்தார்.

"சீன ஆக்கிரமிப்புப் பயமுறுத்தல் இந்தியாவுக்கு இருந்து கொண்டேயிருக்கிறது. இந்தியா தனது பாதுகாப்பு முயற்சிகளைத் தளர்த்தினல் சீன மீண்டும் ஆக்கிரமிப்புச் செய்யக்கூடும்" என்று திரு. டி. டி. கே. கூறினர்.

இந்திய ராணுவபலத்தை இருமடங்காக அதிகரிக்க வேண்டுமென்றும் அவர் கூறினர்.

விமானங்கள்பற்றி திரு. டி. டி. கே. குறிப்பிடுகையில் பெருமைக்காகவோ விளையாட்டுப் பொம்மைகள் போலவோ எமக்கு எதுவும் தேவையில்லையென்றும் நடைமுறை உபயோகத்துக்குத் தேவையானவைகளே நமக்கு வேண்டுமென்றும் டி. டி. கே. கூறினர்.

---

# ஐ. நா. சாஸனம் போன்று ஆபிரிக்க சாஸனம்

## உச்சி மகாநாட்டில் எதியோப்பிய மன்னர் யோசனை

அடிஸ்பாபா, மே 23

ஐ. நா. சாஸனத்தைப் போன்று ஆபிரிக்க சாஸனம் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்றும் ஆபிரிக்கரின் ஒரே குரலாக ஒலிக்கக்கூடிய முறையில் ஆபிரிக்கருக்கென பொதுஸ்தாபனமொன்று அமைக்கப்படவேண்டுமென்றும் எதியோப்பிய சக்கரவர்த்தி ஹெயிலிசெலாஸி நேற்றுஇங்கு ஆபிரிக்க தலைவர்களின் உச்சி மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

ஆபிரிக்க நாடுகளுக்கிடையிலுள்ள பிரச்னைகளை அமைதியான முறையில் தீர்க்கக்கூடிய ஒரு ஸ்தாபனம் அமைக்கப்பட வேண்டுமென்றும் ஹெய்லிசெலாஸி கூறினர்.

ஆசிய நாடுகளுடனும் ஒற்றுமையாக இருக்க வேண்டியது அவசியம் என அவர்கூறினர்.

சுமார் 30 ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் இந்த மூன்றுநாள் மகாநாட்டில் சென்ற ஒருவார காலமாக ஆபிரிக்க வெளிவிவகாரமந்திரிகள் கூடி ஆலோசித்துச் செய்த சிபார்சுகள் பரிசீலனை செய்யப்படவிருக்கின்றன.

---

## "காங்கிரசை தேர்தலில் தோற்கடியுங்கள்"

### காமராஜர் கூறுகிறார்

சென்னை, மே 23

"உங்களுக்கு ஹிந்தி பிடிக்கவில்லையானல், காங்கிரஸ் கட்சியை அடுத்த பொதுத் தேர்தலில் தோற்கடியுங்கள்" என்று திருவண்ணமலை காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் பேசிய போது தமிழ் நாட்டின் முதலமைச்சர் காமராஜர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ஆங்கிலம்தான் எப்பொழுதும் ஆட்சிமொழியாக இருக்குமென்று நேரு ஒரு போதும் கூறவில்லை. சுயநலத்திற்காகவே சிலர் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்த தீர்மானித்திருக்கிறார்கள். டில்லி அரசாங்கத்தின் ஹிந்தி திட்டம், நேருவின் வாக்குறுதியின் படியே அமைந்திருக்கிறது.

---

## வடபகுதிக்கு வரும் கைப்பந்தாட்டக் கோஷ்டி

யாழ்ப்பாணம், புதன்

உடப்பு கைப்பந்தாட்டக் கோஷ்டியினர் அடுத்த வாரம் வடபகுதிக்கு வருவர் எனத் தெரிகிறது. இக் கோஷ்டியினர் அரியாலை கைப்பந்தாட்டக் கோஷ்டியினருடன் இம்மாதம் 26-ம் திகதி போட்டியிடுவர் என்று தெரிகிறது.

---

## வெளிநாடுகளில் தேயிலை பிரசாரம்

கொழும்பு, வியாழன்

இலங்கைத் தேயிலை பற்றித் தென் ஆபிரிக்காவில் பிரபல்யப் படுத்துவதில் தேயிலைப் பிரசாரச் சபையும், வர்த்தக அமைச்சும் ஈடுபட்டுள்ளன. இலங்கையின் தேயிலை பற்றி பிரசாரம் செய்யுமாறு வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதராலயங்கள் கேட்கப்பட்டுள்ளன,

கானவிலுள்ள இலங்கைத் தூதர் இலங்கை பற்றிய கைத்தொழில் கலாச்சார கண்காட்சி ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளார். இக் கண்காட்சியில் தேயிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

---

## இசை அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தென்னிந்தியா அடையாறு கலா ஷேத்திரத்தில் இசைக்கலை பயின்று தாயகம் திரும்பியுள்ள செல்வி செ. ஜெயலட்சுமிதேவி (வதனு) யின் இசையரங்கேற்றம் நாளை சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. சனிக்கிழமை மாலை 7 மணிக்கு வர்த்தலை விளான் மருதடி விநாயகர் ஆலயத்தில் வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் தலைமையில் இசையரங்கேற்றம் நிகழும்.

---

## 800,000 குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து ஊட்டப்பட்டது

கொழும்பு, வியாழன்

நேற்றுவரை சுமார் 800,000 குழந்தைகளுக்கு இளம் பிள்ளைவாத தடுப்பு மருந்து ஊட்டப்பட்டதாக சுகாதார இலகா தெரிவித்துள்ளது. இக் குழந்தைகள் 3 மாதத்திற்கும் 8 வயதிற்கும் உட்பட்டவர்கள்.

இந்த வார முடிவிற்குள் சுமார் 2, 600, 000 குழந்தைகளுக்கு இளம் பிள்ளை வாத தடுப்பு மருந்து ஊட்டப்படுமெனத் தெரிய வருகிறது. முதல் நாளில் மட்டும், 500, 000 குழந்தைகளுக்கு தடுப்புமருந்து ஊட்டப்பட்டது.

### மணி வாக்கு

சமூகத்திலுள்ள ஏழைகளின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால், பணக்காரர் செல்வத்தை சேர்த்துக் கொண்டே போக முடியாது. ஏழைகளிடையே இந்தக் கருத்து பரவுமாமாயின், தங்களைப் பட்டினிப் பிடியிலிருந்து அஹிம்ஸா முறையில் எப்படி விடுதலை செய்துகொள்ளலாமென்பதை உணரவும் அதற்கான பலத்தைப் பெறவும் முடிவதாக இருக்கும். —மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU, National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
வைகாசி மீ 10உ (24-5-63)

## செலாவணியும் மனித உரிமையும்

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்று இப்பொழுது இந்தியாவில் வசித்துவரும் இலங்கையர்களுக்கு இனி அங்கு பென்ஷன் வழங்கப்பட மாட்டாதென்றும் அவர்கள் இலங்கைக்குத் திரும்பி வந்து சேர்ந்த பின்னரே பென்ஷன் தொகை அவர்களிடம் கொடுக்கப்படுமென்றும் அந்நிய செலாவணியை மிச்சப்படுத்துவதற்காகவே அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

அரசாங்கத்தின் மொழிக் கொள்கையால் நான் அரசாங்க சேவையிலிருந்து 55 வயதுக்கு முன்னரே பலரும் ஓய்வு பெறலாயினர். உத்தியோக மொழியில் கருமமாற்ற முடியாதவர்கள் 55 வயதுக்கு முன்னரே ஓய்வு பெற்றுக் கொள்ளலாம் என்ற சலுகையை காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா அளித்தார். அந்தச் சலுகையின் கீழ் ஓய்வு பெற்றவர்கள் வெளிநாடுகளில் சென்று தங்குவதற்கோ வேலை பார்ப்பதற்கோ அவர் தடை எதுவும்விதிக்கவில்லை. ஒருபக்கம் ஓய்வுபெறும் சலுகையையும் அளித்து மறுபக்கம் அவர்கள் வெளிநாட்டில் தங்குவதற்கு மறைமுகமாகத் தடை நடவடிக்கையை மேற்கொள்வது மனித நீதியாகாது.

ஒருகாலத்தில் இலங்கையை சுவர்க்க பூமியாகக் கருதி இலங்கையைத் தாயகமாகக் கொண்டு, இங்கு பதிவுப்பிரஜையானவர்களில் பலரும், இங்கு அரசாங்கம் ஏற்படுத்தும் புதுப்புது தடைகளையும் மனித உரிமைகளுக்கு மாறான சட்டதிட்டங்களையும் பார்த்த பின், மீண்டும் இந்தியப்பிரஜைகளாகி இந்தியா திரும்பிவிட ஆவல் கொண்டுள்ளது பகிரங்க ரகசியமே. கூடுமான வரை, இங்குள்ள இந்திய வம்சாவளியினரை நாடு கடத்தும் எண்ணத்துடனேயே, செலாவணி முதலிய காரணம் கூறி, புதிய தடைஉத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது. மனித உரிமைகளையும் பிரயாண சுதந்திரத்தையும்பற்றிய விஷயம் இது. செலாவணியைவிட, மனிதஉரிமை அதிக முக்கியமாகும். எக்காரணம்பற்றியும் மனித உரிமைகளை மறுக்கப்படாது.

இங்குள்ள புதிய தடைகளைக் கண்டு, இங்கு பதிவுப் பிரஜையானவர்களும், நாடற்றவர்களும் இந்தியா திரும்பி, இந்தியராக விரும்பினும், இந்திய அரசாங்கம் அவர்களை ஏற்க விரும்பாததில் வியப்பில்லை. பிறந்த அத்தாட்சிப் பத்திரத்துக்கு இந்தியாவுக்கு எழுதினால், தாசில்தாரின் கையெழுத்துக் கிடைக்காமல் மாதக்கணக்காக வருடக்கணக்காகப்பலர் தவிக்க நேரிடுவதாக அறிகிறோம். அங்குஇது பற்றி லஞ்ச ஊழல்களும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இது எப்படியாயினும் இந்திய அரசாங்கம் இவ்விஷயமாக அதிக தாராளமனம் காட்டி மனிதாபிமானத்துடன் காரியங்கள் செய்யக் கடமைப்பட்டுள்ளது.

மத்தளத்துக்கு இருபுறமும் இடி என்பர். அதுபோல் இங்கு சிறப்பாகப் பதிவுப் பிரஜையான்வர்களுக்கு இரு அரசாங்கங்களும் போடும் தடைகள் பெரிய இம்சையாகி அவர்கள் வாழ்வையே திகைக்கச் செய்வதாக இருக்கின்றது. இது மனிதர்களைபற்றிய பிரச்சினையாதலால் மனிதாபிமானத்துடனேயே தீர்க்கப்பட வேண்டும். இரு அரசாங்கப்பிரதிநிதிகளும் கலந்து பேசி தாராள மனப்பான்மையுடன் முடிவு செய்தல் வேண்டும் ஓய்வுபெற்றவர்களுக்கு வீண் தடைகளைப் போடுவது பாவம். மனமுண்டானால் வழியுண்டு. மனித உரிமைகளைப்பற்றிப் பேசும் இரு அரசாங்கங்களும் இவ்விஷயமாக அதைக் காரியத்தில் காட்ட வேண்டியது மிக அவசியம். அப்படிச் செய்தால் இலங்கை-இந்தியர் பிரச்சினை வெகுசீக்கிரத்தில் தீர்ந்துவிடும். அதை இனியும் நீடித்துக் கொண்டு போய் அதிக சிக்கலாக்குவது இரு அரசாங்கங்களுக்கும் அழகல்ல.

# சமுதாய வளர்ச்சியில் தொழிலாளர் பங்கு

—காந்துபாய் தேசாய்—

சர்வதேச சுயேச்சைத் தொழிற் சங்க சம்மேளனத்தினால் ஊக்குவிக்கப்பட்ட சுதந்திர தொழிற் சங்க இயக்கம் கடந்த 12 ஆண்டுகளில் உண்மையான ஜனநாயக சக்தியின் அரணாக விளங்கிவந்திருக்கிறது. தொழிற் சங்க கூட்டுறவு சங்க இயக்கங்கள் உலகின் அரசியல் வாதிகளாலும், தலைவர்களாலும் ஊக்குவிக்கப்படாதுபோனால் ஜனநாயகத்தின் அஸ்திவாரம் பலமற்றுப்போய் விடும். நம்மிடையே உள்ள மூர்க்கமான நாச சக்திகளிடமிருந்து ச. சு. தொ. சம்மேளனத்தின் லட்சியார்த்த பணிகள் ஜனநாயகத்தை உலகம் முழுவதிலும் காத்திருக்கின்றன. சுதந்திர தொழிற் சங்க இயக்கம் புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகளுக்கிடையே உண்டாக்கியிருக்கின்றது. மேலும் எல்லாக் கண்டங்களிலும் ஜனநாயக வளர்ச்சிக்குத் தலை சிறந்த தூண்டுகோலாய் இருந்துவந்திருக்கிறது.

தொழிற் சங்க இயக்கம் வலுவாகி, உருப்படியாக, ஏமாற்றும் நோக்கமில்லாத அடிப்படையில் இயங்கினால் பாட்டாளிகள் வர்க்கத்திற்கு மட்டுமன்றி மக்களுக்கும் சமுதாயத்துக்கும் அதிக நன்மைகளைச் செய்ய முடியும். இதனை எனது 40 வருட தொழிற் சங்க ஈடுபாட்டின் அனுபவத்தில் கூறுகிறேன். இந்தத் தொழிலியல் யுகத்தில், சமுதாயம் கட்டுக்கோப்பான தொழிலாளர் வர்க்கத்தின் ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் பெற்றிருந்தால் தான் அமைதியையும், சுபிட்சத்தையும் அதிகம் பெற்றிருக்க முடியும். இக்கொள்கையை வேதாந்த அளவில் ஏற்கக் கூடாது. செயலளவில் எல்லா வகை ஜனநாயகங்களும், எல்லா அரசியல்வாதிகளும், முதலாளிகளும் அல்லது நிர்வாகத்தரப்பினரும் ஏற்க வேண்டும்.

இன்றைய உலகில் பொருளாதார உபகரணங்களின் சேர்க்கைதான் முதலாளிகள் அல்லது நிர்வாகத்தரப்பின ஒரு காலத்தில் மாபெரும் தொழிற்சங்க வாதியாகவும் மக்கள் தலைவராகவும் இருந்திருக்கும் மகாத்மா காந்தி, தொழிலாளர்-முதலாளி என்ற பேதமில்லை எனக் கூறியிருக்கிறார். இரு பிரிவினருமே, சமுதாயத்தின் கட்டுக்காப்பாளர்களாவர். பத்தொன்பதாம் நூற்றூண்டின் கோட்பாடுகளான முதலாளித்துவம், தொழிலாளித்துவம் கூட்டுப் பங்காளித்துவமாக ஆக்கப்படவேண்டுமென தொழிற்சங்க வாதிகளுக்கும், சிப்பந்திகளுக்கும் காந்தி அடிகள் சொல்வதுண்டு. இத்தகைய மனப்போக்கு உருவாக்கப்பட்டுவிட்டால் இப்போதைய வர்க்கபேதம் மறைந்து சுமுகமான வேலை ஒழுங்கு ஏற்படும்.

இருபதாம் நூற்றூண்டின் மறுபகுதியான இப்போது நிர்வாகத்தரப்பில் பங்கு பெறுவதைக் கொள்கையளவில் தொழிற்சங்க இயக்கமும், முதலாளிதரப்பும் ஏற்கச் செய்வதற்கு ச சு. தொ. ச. சம்மேளனம் ஆவன செய்யவேண்டும். தொழிலில் வெறும் சம்பளம் பெறுபவர்கள் என்ற நிலையைக் கடந்து பங்காளிகள் என்ற நிலையை ஏற்படுத்தக் கோரும் கட்டத்திற்குத் தொழிலாளர் சமுதாயம் அபிவிருத்தி அடைந்துள்ளது. இக்கோரிக்கை ஏற்காமல், அதற்கான ஒத்துழைப்பு கிடைக்காமற் போனால் இப்போதைய தேசிய, சர்வதேச தகராறுகள் குறைவது சாத்தியமற்றதாகிவிடும்.

உலகத்திற்கு இப்போது தேவைப்படுவது, சமுதாய நெருக்கடி, அரசியல் நெருக்கடி, மனோதத்துவ நெருக்கடி ஆகியவற்றை அகற்றுவதாகும். இதனைச் செயலளவிலான சமத்துவம்வாயிலாகவே செய்ய முடியும். ஜனநாயகத்தை நிலைநாட்டச் சிறந்த சக்தியாகத் திகழ்வது தொழிற்சங்க இயக்கமே.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளென்றும், பின்தங்கிய நாடுகளென்றும் பல நாடுகள் இப்போது அழைக்கப்படுகின்றன. இது வாலாற்றின் விளைவாகும். 1963-ம் ஆண்டில் வாழும் நாம் கடந்ததை மறந்துவிடவேண்டும். கூட்டுப் பங்காளிகள் என்ற முறையில் கூட்டுத் தொழிலாளர்கள் முறையில் ஒருவர்க்கொருவர் உலகின் செல்வத்தை அடையப் பொதுவான போக்கைப் பெறுகவேண்டும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு மூலதனம் தேவைப்படுகிறது. அந்நிய செலாவணி அல்லது அந்நிய உதவி ரூபத்தில் அந்த நாடுகளுக்கு மூலதன உதவி கிடைக்காதுபோய்விட்டால் ஜனநாயகனவாகிவிடும்.

ஒரு நாடு என்று இருந்தால் ஏழ்மையும், வளமையும் இருப்பது இயல்புதான். இத்தகைய இரு பிரிவுகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை இந்தியாவில் நாம் ஜனநாயக, சட்ட வழிகளில் அகற்றிவருகிறோம். உலகம் மெதுவாக ஒரே சமுதாயமாய் மாறிவருகிறது. உலகின் ஒரு பகுதியில் நிம்மதியின்மை நிலவினால் மறுபகுதி நிம்மதியுடன் மகிழ்ச்சியுடன் இருக்க முடியாது. உலகம் மனித உடலைப் போன்றது. ஒரு பகுதி நலமற்றிருந்தால் எல்லா உறுப்புகளும் பாதிக்கப்படுகின்றனவல்லவா?

இயந்திரமாய விஷயத்தில் ச. சு. தொ. ச. சம்மேளனம் கவனம் செலுத்தவேண்டும். இயந்திரங்கள் சிறப்புடையதாகவிருந்தாலும் மனித மதிப்பை அகற்றி வந்தால் ஆபத்தாகும். மனிதனின் முயற்சியை இயந்திரம் பறிக்காதிருக்கட்டும். இயந்திரங்கள் சுபிட்சம், நலனபிவிருத்தி, கலாச்சாரம் ஆகியவற்றுக்கான சாதனமாக இருக்கட்டும். கடவுளால் அருளப்பட்ட அறிவைப பறிக்காதிருக்கட்டும். மனுக்குலத்தின் நலனபிவிருத்திக்கும்,மகிழ்ச்சிக்கும் அது பயன்படட்டும்.

# அதிகவிலைக்குசீனிவிற்கப்பட்டால் அதிகாரிக்கு அறிவியுங்கள்

## உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் வேண்டுகோள்

கொழும்பு, வியாழன் நாட்டின் தேவைக்குப்போதுமான சீனி கிடைப்பதாகவும், கட்டுப்பாட்டுவிலையிலும்பார்க்க அதிக விலை கொடுத்து வாங்க வேண்டாமென்றும் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி பொதுமக்களைக் கேட்டுள்ளார். அதிக விலைக்கு சீனி விற்கப்பட்டால் அப்பகுதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அறிவிக்கும்படியும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

சுமார் 40,000 தொன் சீனிக்கு உலக நாடுகளிடையே கேள்விப்பத்திர விளம்பரம் கோரப்பட்டுள்ளது. உணவுக் கட்டுப்பாட்டதிகாரி இந்தக் கேள்விப்பத்திரத்தை விடுத்திருக்கிறார். அத்தியாவசிய உணவுப்பொருட்களான,அரிசி, மாவு ஆகியவைகளை சேமித்து வைப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று என உணவு அமைச்சு தெரிவித்துள்ளது. உணவுப் பொருட்களில் ஏற்படும் திடீர்தட்டுப்பாட்டை நீக்கும் நடவடிக்கையாகவே, உணவுப்பொருட்கள் சேமிக்கப்படுகின்றன.

50,000 தொன்மாவுகொண்டு வரப்படவிருப்பதாகவும், அடுத்த மாத இறுதியில் கப்பலில் இருந்து இறக்குமதி செய்யப்படுமென்றும், ஜூலைக்கும், செப்டம்பர் மாதத்திற்கும் இடையில், சீனாவிடமிருந்து 30,000 தொன் அரிசி கோரப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. கொழும்பு துறைமுகத்தில் உள்ள மூன்று கப்பல்களிலிருந்து,சுமார் 11,000தொன் சீனி இறக்குமதி செய்யப்படாமலிருப்பதாகவும், மே மாதம் 28-ம் திகதி இன்னுமொரு கப்பல் மூலம் 10,000 தொன் சீனியை எதிர்பார்ப்பதாகவும், உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. சில்வா தெரிவித்தார்.

சீனி அனுப்பும்படி, கியூபா பிரேசில், போலந்து, ரஷ்யா, கிழக்கு ஜேர்மெனி ஆகிய நாடுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு மாதம் ஒன்றுக்கு 16,000 தொன் சீனி தேவைப்படுகிறது. உணவு இலாகா தற்பொதுது' நாள் ஒன்றுக்கு 600 தொன் சீனி, வியாபாரிகளுக்கும், ஐக்கிய பண்டகசாலைகக்ளுகும் வழங்கி வருகிறது.

## ஐயாறன் எழுதுவது

திருக்கோணமலையில் நடைபெற்ற மண்டலாபிஷேகத்துக்குச் சென்றுவிட்டுக் காரில் திரும்புகையில், அக் கார் ஒரு மரத்தில் மோதி, அதிலிருந்த ஒரு தாய் உயிர்நீத்ததாக ஓரன்பர் தெரிவித்ததைக் கேட்டு திடுக்கிட்டேன். மற்றும் அதிலிருந்த சிலருக்குக காயமென்று தெரிந்தது.

மகன்தான் காரை ஓட்டியதாம். தனக்கு நித்திரை வருவதாயும், இரவில் ஓரிடத்தில் தங்கிவிட்டு பிறகு அதிகாலையில் செல்லலாமென்று மகன் கூறியும், நேரே வீடு சென்றுவிட்டால், அங்கு சென்று ஓய்வெடுத்துக்கொள்ளலாமென்று தாய்சொல்லியதாயும், மகனர் கார் ஓட்டுகையில், சற்றே கண்ணயர்ந்தபோது, கார் பாதையை விட்டு நீங்கி ஒருமரத்தில் மோதி இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரிகிறது.

கும்பாபிஷேக தரிசனம் மிகவும் விசேஷமென்பர். நல்ல புண்ணிய காரியத்துக்குச் சென்று திரும்பியவர்களுக்கு ஏன் இந்தச் சோதனை? இறைவன் கருணையற்றவரா? ஒன்றுமே புரியவில்லை. குறித்த காலம் முடிந்தபின் அரைக்கணமும் நாம் இருக்க முடியாதுதான். காரில் அன்றிரவு செல்லாமல் இருந்தாலும், வேறு ஏதாவது காரணத்தால் மரணம் சம்பவித்திருக்கலாம். அதைத் தப்பமுடியாதுதான. மகனர் உயிர் தடபியது தெய்வாதீனம். அதை நினைந்து, மனஆறுதல் அடையவேண்டியதைததவிர வேறென்ன செய்வது!

* * *

கார் ஓட்டுவது சாதாரண விஷயமென்று சிலர் கருததாம் ஆனால் மிகப் பொறுப்புவாய்ந்தது. காரில் செல்லுகையில் நமது உயிரெல்லாம் டிரைவர் கையில்தான். ஒரு கணம் அவர் தூங்கினால் போதும், காரில் செல்லும் நாமெல்லாம் நிரந்தரமாகத் தூங்கவேண்டியதுதான். இப்போது கார்விபத்துக்கள் சமீபகாலமாக மிகவும் அதிகரித்து வருவதைப் பார்கிகிறோம். விதி கெட்டியாக இருப்பவர்கள், விபத்து ஏற்பட்டாலும் எப்படியோ தப்பிவிடுகின்றார்கள். யாழ்ப்பாண கோவில் குருக்களொருவர், அநுராதபுரத்துக்குப் பக்கத்திலே கார் விபத்தில் சிக்கிக்காயமடைந்து, இப்பெரிய கண்டத்திலிருந்து தெய்வாதீனமாகத் தப்பிவிட்டார். அநுராதபுரம் ஆஸ்பத்திரியிலே சிங்கள டாகடர்களும், அவர் ஒரு கோவில் குருக்கள்என்பதைஅறிந்ததும், அதிக கவனம் செலுத்தி, மிக அன்பாக இருந்ததாகத் தெரிகிறது. யாழ்ப்பாணத்தில் கூட இவ்வளவு கவனம் செலுத்தி வசதிஅளித்திருக்க மாட்டார்கள் என்று அந்தக் குருக்கள் அநுராதபுரம் ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கு நன்றி செலுத்துகின்றார்.

கொழும்பிலே ஒரு பிரமுகர் தூரபபிரயாணத்தைக் கூடுமானவரை காரில் செல்லாமல், ரயிலில்தான் சென்று முடிப்பாராம்.கார் பிரயாணமெல்லாம் ஆபத்து என்றுகூற முடியாதுதான். தெருவில் எவ்வளவோ கார்கள் செல்லுகின்றன. விபத்தில்லாமல் பத்திரமாகச் சேர்க்கின்றன. என்றாலும் இரண்டொருவிபத்துக்கள் நாம் அதிக எச்சரிக்கையாக இருக்கும்படி நம்

(5-ம் பக்கம் பார்க்க)

# போலி வைத்தியத்தால் புற்றுநோயை தடை செய்ய முடியவில்லை

## சுகாதார சேவை அதிபதி அறிக்கை

கொழும்பு, வியாழன்

"மனித சமூகத்தையும் தேகாரோக்கியத்தையும் பாதிக்கக்கூடிய பெரிய பிரச்சனைகளில் கூடிய இரத்த அமுக்கம், புற்றுநோய், ஊட்டக்குறைவல் உண்டாகும் நோய்கள் முதலியன இடம் பெறுகின்றன. புற்றுநோய் இலங்கையில் அதிகரித்து வருவதற்கான காரணத்தைக கூறமுடியவில்லை. இந் நோய் பற்றிய அறியாமையும் போலி வைத்தியமும் பரந்து காணப்படுவதனுல், இந்நோயைத் தடைசெய்வதற்கும் இதனை ஆரம்பத்தில் கண்டுபிடித்து சிகிச்சையளிப்பதற்கும் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பயனற்றுப் போய்விடுகின்றன" என்று சுகாதாரப்பகுதி அதிபதி டாக்டர் டி. எஸ். ஜே. கஹவிற்ற தனது 1958-ம் ஆண்டு நிர்வாக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நகரங்களில் புதிய கைத்தொழில்கள் ஆரம்பமாகி வருவதைத் தொடர்ந்து கிராமத்திலுள்ள மக்கள் கிராமத்தை நோக்கிப் படையெடுத்து அங்கு சிறு சிறு குடிசைகளைக் கட்டி வாழ்ந்து வருவதால் சுற்றுடல் சுகாதாரக் குறைவினுல் உண்டாகும் நோய்கள் அதிகரிப்பதாகவும் டாக்டர் கஹவிற்ற தனது ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### க்ஷயரோகம்

1956-ம் ஆண்டு உலகசுகாதார ஸ்தாபனம் செய்து கொண்ட கணக்கெடுப்பின்படி இலங்கையில் 63,000 க்ஷயரோகிகள் இருந்ததாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1958-ம் வருடத்தில் பீ.சீ.ஜீ. மருந்து ஊட்டுவதும், எக்ஸ்ரே கதிர் மூலம் படமெடுப்பதும் பலமுகப் படுத்தப்பட்டதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### யானைக்கால் நோய்

யானைக்கால் நோயைக் கண்டுபிடித்து சிகிச்சையளித்து குணப்படுத்துவதற்காகப் பல்வேறு நடைமுறைகளை கையாண்டு பல்வேறு இடங்களில் நோயாளர்களின் இரத்தம் பரிசோதனைக்காக இரவு நேரங்களில் எடுக்கப்பட்டதாகவும் இவ்விதம் 83,410 இரத்த மாதிரிகள் அவ் வருடத்தில் சேகரிக்கப்பட்டதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது. 1958-ம் ஆண்டில் சுமார் 51 2 நோயாளிகள் சிகிச்சையளிக்கப்பட்டனர் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மலேரியாத் தடைஇயக்கம்

வறண்ட பிரதேசங்களில் ஆய்வுகள், மலேரியாவினுல் பீடிக்கப்பட்ட நோயாளர்களுக்குச் சிகிச்சையளித்தல், காய்ச்சல் மதிப்பீடு, நோய் தொற்றுவதற்கான காரணங்களையும், மருந்து தெளிக்கப்படாத வீடுகளையும் மருந்து தெளித்தலிலுள்ள குறைகளைக் கண்டுபிடித்தல் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்பட்டதாக அறிக்கை தெரிவிக்கின்றது. வைத்திய ஸ்தாபனங்களுக்கு வந்த காய்ச்சல் நோயாளர்களிடமிருந்து 54,629 இரத்த மாதிரிகள் பரிசோதனைக்கெடுப்பட்டதாகவும் இந் நோயாள் பீடிக்கப்பட்டவர்களுல் அனேகர் வட, மத்திய, கீழ் மகாணங்களை சேர்ந்தவர்களென்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### புற்றுநோய்

1958-ம் ஆண்டில் மஹாராகம புற்றுநோய் சிகிச்சைத் ஸ்தாபனம் ஒன்று கருமமாற்ற ஆரம்பித்ததாகவும் 459 நோயாளர்களுக்கு கதிரிய சிகிச்சை அளிக்கப்பட்டதோடு 14 பெரிய சத்திரசிகிச்சைகளும் அவ்வாண்டில் செய்யப்பட்டதாக அறிக்கை தெரிவிக்கின்றது.

### மாணவர்கள் பரிசோதனை

1958-ம் ஆண்டில் 163,290 மாணவர்களும் 1957-ம் ஆண்டில் 169,404 மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டதாகவும் 1958-ம் ஆண்டில் பரிசோதிக்கப்பட்ட மாணவர்களில் 105,291 மாணவர்களுக்கு குறைபாடு இருக்கக் காணப்பட்டதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது.

## சென்ற வருடத்தில் 21 பேருக்கு காசநோய் பீடித்தது

பொல்காவலை, வியாழன்

சென்ற வருடத்தில் பொல்காவலை பட்டின சபை எல்லைக்குள் 21 பேருக்கு காசநோய்க்கான சிகிச்சை அளிக்கப்பட்டது என்று பொல்காவலை பட்டின சபைத் தலைவர் தமது நிர்வாக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பட்டின சபைத் தலைவர் திரு. எச். பி. சார்னலிஸ் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்பொழுது பொல்காவலையில் மலேரியா நோய் ஒரு பிரச்னையாகவில்லை.

வரட்சி இங்கு பல தடவைகளில் மக்களை அவதிக்குள்ளாக்கிவிடுவதால் தண்ணீர் விநியோகத் திட்டம் இங்கு அமுல் நடத்தப்படுவது அவசியம்.

## ஜயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மைத் தூண்டுவதாக இருக்கின்றன. மிகவும் அவசியமாக இல்லாதவரை, காரில் செல்லாமல் இருப்பது மேலாகுமல்லவா?

* * *

நேற்று தபாலில் ஒரு பெரிய புஸ்தகம் கிடைத்தது. அது என்னதெரியுமா? சுகாதார டைரக்டரின் 1958-ம் வருடநிர்வாக அறிக்கை. ஐந்துவருடம் கழித்து இப்போது பிரசுரித்திருக்கிறார்கள். சிங்களம், ஆங்கிலம் இவ்விரு மொழிகளிலும் வெளியாகியுள்ள இந்த அறிக்கை 456 பக்கங்களுள்ளன. அறிக்கையின் கருத்தை தமிழில் தனியாக ஒரு புத்தகமாக வெளியிட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

சமீப வருடங்களில் வெளியான பலநிர்வாக அறிக்கைகள் தமிழில் கிடையாது. இந்தப் பழைய அறிக்கையை தமிழிலும் சுருக்கமாக வெளியிட்ட காரணமென்ன? அரசாங்கம் இதுபற்றி கைக்கொண்டுள்ள கொள்கை என்ன? ஒவ்வொரு இலாகாவும் வெவ்வேறு மொழிக்கொள்கையைக் கைக்கொண்டுள்ளனவா? அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கை படிப்படியாக மாறி வருகிறதா?

* * *

ஒருசுடரா யுலகேழுமானன் கண்டாய் ஓங்காரத்துட் பொருளாய் நின்ருன் கண்டாய, விரிசுடராய் விளங்கொளியாய் நின்ருன் கண்டாய் விழவொலியும் வேள் ஒலியுமானுன் கண்டாய், இருசுடர் மீதோடா இலங்கைக் கோனை யிடழிய இருபது தோளிறுத்தான் கண்டாய், மருசுடரின் மாணிக்கக் குன்று கண்டாய் மழபாடி மன்னும் பணுளன்ருனே.

— திருநாவுக்கரசர்

## அரசாங்க ஊழியர்மீது உதவி மந்திரி குறைபாடு

வத்தளை, வியாழன்

'அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல் நடத்துவதற்கு சில அரசாங்க ஊழியர்கள் முட்டுக்கட்டையாக இருக்கிறுர்கள். அரசாங்கத்தின் முற்போக்கு கொள்கைகளுக்கு எதிராக இவர்கள் வேலை செய்கிறுர்கள' என உதவி கல்வி மந்திரி திரு. வி. டி ஜீ. கருணாரத்ன வித்யசாதகா ராஜஸ்ரீ வித்யாலயத்தை திறந்து வைத்துப் பேசுகையில் கூறினுர்.

திரு. கருணாரத்ன மேலும் பேசுகையில் கூறியதாவது:

பொறுப்பற்ற அரசாங்க ஊழியர்களால் பல அபிவிருத்தி வேலைகள் பாழாகிவிட்டன. நாட்டின் கலாசாரத்தையும் நாகரிகத்தையும் பேணும் அரசாங்க ஊழியர்களையே அரசாங்கம் விரும்புகிறது. அரசாங்கத்திலும் நாட்டிலும் அரசாங்க ஊழியர் மிகவும் பற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

பெலியகொடை வித்தியாலங்கார பல்கலைக் கழக உபவேந்தர் வண. கிரிவத்துடுவா ஸ்ரீ பிரக்னசார தேரோ பேசுகையில் மதச்சண்டைகள் கேட்டையே விளைவிக்கும் என்றும் நாட்டின் முன்னேற்றத்துக்கு இருபெரும் தடையாக இருக்குமென்றும் கூறி பௌத்த மதத்தவர்களின் முயற்களில் வத்தளையிலுள்ள கொன்கி தோட்டையைச் சேர்ந்த கத்தோலிக்கர்கள் ஒத்துழைப்புத் தந்ததற்கு தாம் நன்றி செலுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

## யு. என். பி.யினர் பார்வையற்றவர்களா?

மாவனல்லை, வியாழன்

'எங்கள் அரசாங்கம் செய்த ஒரு முன்னேற்றத்திட்டத்தையாவது காட்டும்படி யு.என்.பியினர் நாட்டு மக்களிடையே சென்று தவருன பிரசாரம் செய்துவருகிறுர்கள். அவர்கள் என்ன பார்வையில்லாதவர்களா? வளவ சந்திரிகா வீவா திட்டம் கூட அவர்களின் பார்வைக்குத் தென்படவில்லையா? என்று கல்வி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. வி. ரி. ஜி. கருணாரத்ன கெமட்டமக மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

இப்படிப்பட்ட திட்டத்தை யு. என். பி. பிரதமர்களான சேர் ஜோன் கொத்தலாவலையோ, டட்லி சேனநாயக்காவோ ஆரம்பிக்கவில்லை. இத்திட்டத்தின் மூலம் 5000 குடும்பங்களை அரசாங்கம் குடியேற்றியுள்ளது. 1965-ம் ஆண்டு இத்திட்டம் பூரணமாக நிறைவேற்றப்படும்.

## பெற்ரூேல் தட்டுப்பாடு ஏற்படலாம்

கொழும்பு, வியாழன்

பெற்ரூேல் இறக்குமதி கோட்டாக்கள் குறைக்கப்பட்டுள்ளதால் பெற்ரூேல் விநியோகத்தில் தட்டுப்பாட்டு நிலை ஏற்படலாம் என பெட்ரோல் கம்பெனி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எண்ணெய்க் கம்பனி அதிகாரிகளுடன் திறைசேரி உதவிக் காரியதரிசி திரு. விஸ் எம் டி' மெல் நடத்திய மகாநாட்டிலேயே மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டது.

# தென்னிலங்கையில் பெருமழை

## தந்திசேவை, புகையிரத சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன

கொழும்பு, வியாழன்

சுமார் 2500 பேர் கொழும்பு வடக்கில் பெய்த பலத்த மழையின் காரணமாக வீடு இழந்து தவிக்கிறுர்கள். அவர்களின் வீடுகளை வெள்ளம் முற்றுக அழித்துவிட்டது. கொழும்பு நகரசபையைச் சேர்ந்துள்ள பொது சேவைப் பகுதியினர் அவர்களுக்கு உணவு அளிக்க வசதிசெய்துள்ளதோடு தற்காலிகமாக தங்குவதற்கும் ஏற்பாடுசெய்து வருகிறுர்கள. தர்மப் பணம் கமிஷனர் திரு. பி. டபிள்யு. ஆர். டி. சில்வா, எதற்கும் தயாராக இருக்கும்படியும், தொடர்ந்து மழை பெய்வதால் ஏற்படவிருக்கும் சம்பவங்களை சமாளிக்கும் படியும், பொதுசேவைப் பகுதியினரைக் கேட்டுள்ளார்.

மாகாணங்களில் இருந்து கிடைத்த அறிக்கைப்படி கட்டுநாயக்காவில் இதற்கு முன் பெய்திராத அளவில் 6.18 அங்குல மழை தொடர்ந்து 24மணித்தியாலங்களாகப் பெய்திருக்கிறது.

இரத்மலானை (5.92 அங்குலம்), அவிசாவலை (5.35 அங்குலம்), களுத்துறை (5.28 அங்குலம்), சிலாபம் (4.85 அங்குலம்) கொழும்பு வான ஆராய்ச்சி நிலையம் (3.35 அங்குலம்), இரத்தினபுரி (2.04 அங்குலம்), எகிலியாகொடை 2.03 அங்குலம்), ஹன்வலை (3.10 அங்குலம்), லபுகம (2.46 அங்குலம்), முத்துகம (3.78 அங்குலம்), நீர்கொழும்பு (3.78 அங்குலம்), ஆகிய இடங்களிலும் அதிக மழை பெய்துள்ளது. வெள்ளம் அதிகரித்துவருவதால் தெற்கு மாகாணத்திலுள்ள அநேக பாதைகள் பாதிக்கப்பட்டுள்ளன கொழும்பு-காலி வீதியில் இரண்டு இடங்கள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. காலி-பத்தேகம வீதியில் 3-வது மைலில் ஒன்றரை அடியும், 5-வது மையிலில் ஒன்றேமுக்கால் அடியும், 10-வது மையிலில் ஒரு அடியும் மூழ்கப்பட்டுள்ளது. பெந்தோட்ட வீதியில் 7-வது மையிலில் 4 அடியம், 8-வது மையிலில், இரண்டரை அடியும், வீதி தண்ணீரில் மூழ்கப்பட்டுள்ளது. இந்த இடங்களில் தண்ணீர் பெருகிக்கொண்டே இருக்கிறது.

ஜின்கங்காவிலும், நில்வலா கங்காவிலும் தண்ணீர் மேவிப் பாய்கிறது. காலி அரசாங்க அதிபர், பொலிஸாருக்கும், காரியாதிகாரிகளுக்கும், கிராம சேவகர்களுக்கும் பெரும் வெள்ளத்தை சமாளிப்பதற்கு ஆயத்தமாக இருக்கும்படி அறிவித்துள்ளார்.

கொழும்புக்கும், மாத்தறை, அம்பலாங்கொட, ஹம்பாந்தோட்டை, ஹோமகம, பிலியந்தல, வெலிவெறிய, கோகன்தற, புமுணுகம, யக்கலை ஆகிய இடங்களுக்குமிடையில் உள்ள தந்திச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

### காலியில்....

ஹெலிகோப்டர் உதவி மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைபார்வையிடுவதோடு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிக்கும்படியும், அரசாங்க அதிபரையும், பொலிஸாரையும், காலி எம். பி. திரு. தகநாயக்காவும், பத்தேகம எம். பி. திரு. அல்விசும் கேட்டுள்ளார்கள்.

தற்பொழுது பத்தேகமாவிற்கும் மற்றும் இடங்களுக்குமுள்ள தொடர்புமுற்றுகத்துண்டிக்கப்பட்டுவிட்டது.

பள்ளத்தாக்குப் பகுதிகளிலுள்ள வீடுகளில் உள்ளவர்களை வெளியேறுமாறு காலி பொலிஸார் கேட்டுள்ளனர். இங்கு இன்னும் முற்றுக மழை ஓயவில்லை.

பத்தேகமவிற்கு அருகிலுள்ள அகலியாவில் ஜின்கங்கா நீர் மட்டம் கவலைதரக்கூடிய' அளவில் 18 அடி 4 அங்குல உயரத்தை அடைந்துள்ளதாக, காலி நீர்ப்பாசன இன்ஜினியர், அரசாங்க அதிபர் திரு. ஏ. எஸ். நவரத்தினராசாவிற்கு அறிவித்துள்ளார்.

பத்தேகமவிலும் தெல்லிகடவிலும் உகவத்தையிலும் வக்வெல்லையிலும் பெருவெள்ளம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜின்கங்காவிற்கு அருகிலுள்ள பல வீடுகள் மூழ்கிவிட்டதாகவும் சேதம் எவ்வளவு என்று கணக்கிடமுடியாதென்றும் அறிவிக்கப்பட்டது.

### நீர்கொழும்பில்—

இங்குள்ள பள்ளத்தாக்கு பகுதிகள், கடந்த மூன்று நாட்கள தொடர்ந்து பெய்த பலத்த மழையினுல் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு பஸ் நிலையம், தம்மித்த ரூேட்டு, தெகில்மவத்த, சென். ஜோசப் தெருகளுவ வீதியில் சில இடங்கள்' பொலவலான ஆகிய இடங்கள் அதிகம் பாதிக்கப் பட்டுள்ள பகுதிகளாகும்.

நீர்கொழும்பு நகரசபைத்தலைவர். திரு. ஜோன் ரொட்றிகோவும், நகரசபை அதிகாரிகளும் பாதிக்கபபட்ட இடங்களுக்கு சென்று பார்வையிட்டார்கள்.

மழை காரணமாக வீடு இழந்தவர்கள் சற்பொழுது தற்காலிகமாக, சென். ஜோசப் ஆலயத்தில் தங்யிருக்கிறுர்கள். அவர்களுக்கு உணவு வசதியளிக்க, ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகிறது.

### தெல்வத்தையில்—

பெருவெள்ளம் காரணமாக இப்பகுதியிலுள்ள அநேகர் வீடு இழந்து, வேறு இடங்களுக்கு சென்றுள்ள போதிலும், சிலர் தங்கள் வீடுகளிலுள்ள, மேசைகளில் நித்திரை செய்கிருர்கள்.

நேற்று பெய்த பலத்த மழை காரணமாக, வழக்கமானபுகையிரத சேவை பாதிக்கப் பட்டது. புகையிரத பாதைகளில். தென்னை மரங்களும், வேறு பெரிய மரங்களும் விழுந்ததால் தந்திப்போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

டொடன்டுவ, ஹக்கடுவ, தெல்வத்த, அக்குரதா, மகா அம்பலாங்கொட, அகுன்கல, பலப்பிட்டி, அளுத்கம ஆகிய இடங்களில் வெள்ளப்பெருக்கு அதிகரித்துக் கொண்டு வருகிறது.

பலப்பிட்டியாவிற்கும்,கொஸ்கொடவிற்கும் இடையிலுள்ள புகையிரதப்பாதை வெள்ளத்தால், புகையிரதம் மிகவும் குறைந்த வேகத்தில் ஓடுகின்றது.

### அம்பலாங்கொடையில்

இங்குள்ள காலி வீதி 3 அடி தண்ணீரில் மூழ்கியுள்ளதால், வாகனப் போக்குவரத்து தடைப்பட்டது.

அம்பலாங்கொடையில் ருகுணகுமாரி கடுகதிப்புகையிரதம் வெள்ளம்காரணமாகஇரு மணித்தியாலங்கள் தாமதித்தது. இப்புகையிரதம் கொழும்பிற்கு நாலு மணி நேரம் பிந்திச் சென்றது.

புகையிரத போக்கு வரத்து பாதிக்கப்பட்டதால், அநேக அரசாங்க உத்தியோகத்தர்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளானுர்கள்.

தெகிவளை-கல்கிசை மேயர், திரு. எல். வி. குணரத்ன, புகையிரத போக்குவரத்து தடைப்பட்டதையிட்டு, புகையிரத நிலைய அதிகாரிகளை குற்றம் சாட்டினுர்.

## பாராட்டு

யாழ்ப்பாணம், வியாழன்

தண்டுவான் பகுதி கிராமத் தலைமைகாரராய் சேவையாற்றி இளைப்பாறிய திரு. சங்கரப்பிள்ளை உடையார் சதாசிவத்தை பாராட்டும் நோக்கத்துடன் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை தண்டுவான் அரசினர் பாடசாலை மண்டபத்தில் வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் தலைமையில் ஓர் பாராட்டு வைபவம் நடைபெறும்.

# "தமிழ் உரிமைக்கு தொடர்ந்து போராட வேண்டும்"

## தமிழ் மறைக்கழகம் வேண்டுகோள்

கொழும்பு வியாழன்

அண்மையில் கொழும்புத் தமிழ்ச் சங்கப் பணிமனையில் நடைபெற்ற தமிழ்மறைக் கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டுக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

1. சாதி, மத, கட்சி வேறுபாடுகளின்றி ஜூன் 6-ம் நாளன்று திருவள்ளுவர் திருநாளை ஒவ்வொரு பாடசாலையிலும் கொண்டாடுமாறு ஆசிரியர்களையும் மாணவர்களையும் தமிழ் மறைக் கழகம் கேட்டுக்கொள்ளுகிறது.

2. ஓரினத்தின் உயிர்நிலை அவ்வினத்தின் தாய்மொழியேயாகையாலும் வாழ்வின் துறையனைத்திலும் தாய்மொழி முதலிடம் பெறுவிடில் அம்மொழிக்குரிய இனம் உயர்ந்து சிறந்து வாழமுடியாதாகையாலும்தமிழ் மொழிக்குத் தம் வாழ்வின் துறையனைத்திலும் முதலிடம் நல்குமாறும்' 'எல்லாந் தமிழியக்கத்தை எங்கும் பரப்புமாறும் தமிழ் மக்களைத் தமிழ் மறைக் கழகம் கேட்டுக்கொள்ளுகிறது.

3. ஓரினத்தின் மொழி உரிமை பறிபோனால் முழுவாழ்வும் பாதிக்கப்படுமாகையாலும், ஆட்சிமொழியாகாத எம்மொழியும் அடிமைமொழியாகிக் குன்றிப்போகுமாகையாலும் இலங்கையிலே தமிழை ஆட்சிமொழியாக்குவதற்கு உறுதியுடன் இடைவிடாது அறவழியிற் போராடவேண்டுமென்று தமிழ் மக்களைத் தமிழ்மறைக் கழகம் கேட்டுக்கொள்ளுகிறது.

4. அரசாங்கம ஆட்சித்துறையிலே தமிழை ஒழித்துவிட முயல்வது மட்டுமன்றித் தாய்மொழி வாயிலாகக் கல்[illegible]ட்டல என்றுதான் ஏற்றுக்கொண்ட கல்விக் கொள்கைக்கும் மாறுகத் தமிழைப் புறக்கணித்துத் தமிழ்மாணவர்களுக்குப் போதிய வாய்ப்புக்களை நல்க மறுப்பது அநீதியான செயலாகையால் இவ்வாறு செய்வதை நிறுத்திச் சிங்கள மாணவர்களுக்கு நல்கும்எல்லா வாய்ப்புக்களையும் தமிழ் மாணவர்களுக்கு நல்குவதற்கு முயலவேண்டுமென்றும், சிங்களத்தைப்போல தமிழிலும் சட்ட நூல்கள், மருத்துவ நூல்கள், வரலாற்று நூல்கள் முதலியவற்றை மொழிபெயர்க்கவும், சட்டநூற் சொற்றொகுதிகள், மருத்துவச் சொற்றொகுதிகள் முதலியவற்றை ஆக்கவும்வேண்டிய நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டுமெனவும் பிரதம மந்திரியை தமிழ் மறைக் கழகம் கேட்டுக்கொள்ளுகிறது.

பின்வருவோர் அடுத்த ஆண்டு அலுவலாளர்களாகவும் ஆட்சிமன்ற உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கா. பொ. இரத்தினம்,செயலாளர்: வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம், துணைச் செயலாளர்: திரு. மா. க. கனகேந்திரன், பொருளாளர்: வித்துவான் இ. சி. சோதிநாதன், ஆட்சிமன்ற உறுப்பினர்கள்: திருவாட்டிகள் மகேஸ்வரி பாலகிருஷ்னன், க. செல்லத்துரை, செல்வி நா. காசிப்பிள்ளை, திருவாளர்கள் இ. இரத்தினம், மு. கணபதிப்பிள்ளை, ஆ. கந்தையா, எஸ். எம். கமால்தீன், இ. சங்கரப்பிள்ளை, ச. சரவணமுத்து, பண்டிதர் செ. சிவலிங்கம், ஆ. க. சுப்பிரமணியம், தமிழோவியன், வ. நடராசா, சி. மதியாபரணம் வை. முத்துக்குமாரசுவாமி, இ. முருகையன்.

---

## புகையிரதத்தால் பெண் மோதப்பட்டார்

தெல்வத்தை, வியாழன்

நேற்றுக் காலை பிலுவலையில் 45 வயதுடைய ஒரு பெண் ருகுணகுமாரி கடுகதிப் புகையிரதத்தால் மோதப்பட்டுப் படுகாயமடைந்தார். அப்பெண் அதே புகையிரதத்தில் களுத்துறைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அதன்பின் நாகொடை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

---

## சுதந்திரக் கட்சியின் வருடாந்த மகாநாடு

கொழும்பு, புதன்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மகாநாடு பதுளையில் ஜூன் மாதம் 1-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இந்த மகாநாடு மிகச் சிறிய அளவில், நடைபெறுமெனத் தெரியவருகிறது.

அட்டவணையிலுள்ள தீர்மானங்களையிட்டு விவாதிக்க மகாநாட்டில் நேரமிருக்காது என சில அங்கத்தவர்கள் கருதுகிறார்கள்.

மகாநாடு ஆரம்பமாவதற்கு முன் ஒரு ஊர்வலம் நடைபெறும்.

பிரதம மந்திரியின் தலைமையுரை சுமார் 1 மணி நேரம் வரை நீடிக்கும என எதிர் பார்க்கப்படுகிறது. அதன்பின் தீர்மானங்கள் விவாதிக்கப்படுவதோடு புதிய உத்தியோகஸ்தர்களும் 'தெரிவு செய்யப்படுவார்கள். நண்பகல் 1 மணிக்கு சாப்பாட்டுக்காக மகாநாடு ஒத்திவைக்கப்படும்.

அன்று பிற்பகல் 3 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும்,

பொதுக்கூட்ட முடிவில் கீழைத்தேய நடனங்களும் படக்காட்சியும் காண்பிக்கப்படும்.

---

## முஸ்லிம் மகாவித்தியாலயமாக்க முயற்சி

வவனியா, புதன்

முஸ்லிம் மகா வித்தியாலயம் ஒன்று வவனியாவில் கட்டப்பட வேண்டுமென்றும், இதற்கு சாளம்பைக் குளம் அரசினர் முஸ்லிம் பாடசாலையே சகல விததத்திலும் சிறந்ததென்றும் பதினொரு கிராமங்களின் 33 நிர்வாக உறுப்பினர்களும் ஆசிரியர்களும், கி. மு. சங்க மண்டபத்தில் கூடியபோது ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை தண்ணீரூற்று நிர்வாக அங்கத்தவர் பிரேரித்தார். முல்லைத்தீவு நிர்வாக அங்கத்தவர் அனுமதித்தார்.

இது விஷயமாக வவனியா கல்வி அதிபரையும், மாவட்ட கல்வி அதிகாரியையும், பேட்டிகான ஒரு விசேஷ குழு முயற்சி எடுத்து வருவதாக அறியப்படுகிறது.

இவ்விஷயம் அண்மையில் வவனியாவில் நடைபெற்ற வவனியா மாவட்ட இஸ்லாமிய கல்வி அபிவிருத்தி சபையின் மகாநாட்டிலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

---

## உதவி நன்கொடை அதிகரிப்பு

கொழும்பு, வியாழன்

கடந்த ஆறு வருடங்களிலும் காசநோயாளர்களுக்கு அளிக்கப்படும் உதவி நன்கொடைப் பணம் 40 லட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது. 1956-ம் ஆண்டில் 4,313,674 ரூபாவே உதவி நன்கொடைப் பணமாக வழங்கப்பட்டது. ஆனல் சென்ற வருடம் 90 லட்சம் ரூபா காசநோயாளர்களுக்கு உதவி நன்கொடையாக வழங்கப்பட்டது. வருடா வருடம் காசநோய் உதவி நன்கொடை பெறுவோரின் தொகை அதிகரித்து வருவதாகவும சமூக சேவைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

---

## மந்திரியின் யோசனைக்கு காலி எம். பி. கண்டனம்

காலி, புதன்

அக்மீமனத் தொகுதியிலுள்ள வக்வெலையில் எண்ணை சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவாது கொழும்புத்துறைமுகத்திலிருந்து 16 மைல் தூரத்திலுள்ள ஒரு இடத்தில் நிறுவ கைத்தொழில் அமைச்சு அரசாங்கத்திற்கு சிபார்சு செய்துள்ளதை காலி எம். பி. திரு. டபிள்யு. தகநாயகா கண்டித்துள்ளார்.

காலி எம். பி. தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளதாவது:-

'நான் குறிப்பிட்டிருந்த இடமான அக்மீமனத் தொகுதியிலுள்ள வக்வெல காலித் துறைமுகத்திலிருந்து 5 மைல் தூரத்திலேயே இருக்கிறது. ஆனல் கைத்தொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ள இடம் கொழும்பு துறைமுகத்திலிருந்து 16 மைல் தூரத்திலுள்ளது. எல்லாவிததத்திலும் நான் குறிப்பிட்டுள்ள இடம் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஏற்றதொன்ருகும். கைத்தொழில் அமைச்சின் பாரபட்சம் நிறைந்த நோக்கினல் நாடு பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறது.

மற்றவர்களின் ஆலோசனைக்கு எதுவித மதிப்பும் கொடுக்காத இந்த அமைச்சை மக்களின் அபிப்பிராயத்துக்கு மதிப்புக்கொடுக்குமாறு மக்கள் வற்புறுத்த வேண்டும்.'

---

## காலிப் பகுதியில் வெள்ளம்

காலி, புதன்

நில்வலகங்கா, ஜின் கங்கா ஆகிய நதிகளில் பலத்த மழையின் காரணமாக, நீர்மட்டம் உயர்ந்துவருகிறது. ஏற்கனவே சில இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.காலி மாத்தறைப் பகுதிகளில் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுவருகிறது. காலி நகரத்தில் பல பகுதிகள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. தெருவுக்கு மேலலே தண்ணீர் பாய்ந்து ஓடுகுறது.

பத்தேகம தொகுதியிலுள்ள அகலியா, ஓலுவபோட, மகாகொட ஆகிய இடங்கள் வெள்ளத்தில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

கலபொடபத்து, வெலபொடபத்து பொலிஸாருக்கும், கிராமதிகாரிக்கும், கிராமசேவகர்களுக்கும் பெரிய வெள்ளப்பெருக்கைச் சமாளிக்க ஆயத்தமாக இருக்கும்படி காலி அரசரங்க அதிபர் அறிவித்துள்ளார்.

கொழும்பிற்கும், காலிக்கும் இடையே உள்ள புகைரதச் சேவையும், தந்திச் சேவையும் மழை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

---

## மாணவர்மன்ற நிர்வாகிகள்

வேலணை, புதன்

வேலணை மத்திய மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர் மன்றக் கூட்டம் செல்வன் சி. சடாட்சர சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர்: அதிபர் திரு. அ. தி. சபாரத்தினம், ஆலோசகர்: திரு. க. இராசையா ஆசிரியர், திரு. பொ. கேதாரநாதன் ஆசிரியர், தலைவர்: செல்வி க. பெரியநாயகி, துணைத்தலைவர்: செல்வன் ஆ. சண்முகலிங்கம், இணைச் செயலாளர்கள்: செல்வி குணபூஷணம், செல்வன் ந. முத்துகிருஷ்ணன், பொருளாளர்: செல்வி சி பூமகள், துணைப் பொருளாளர்: செல்வன மா. மகாலிங்கம். செயற்குழுவும் பத்திரிகைச்குழுவும் அமைக்கப்பட்டது.

---

## குறித்த நேரத்திற்கு முன்னரே புகையிரதம் புறப்பட்டுவிடுகிறது!

யாழ்ப்பாணம், வியாழன்

கடந்த சில வாரங்களாக சில புகையிரதங்கள் நேரத்திற்கு முந்தி புகையிரத நிலையத்தை விட்டுப்புறப்படுவதால், வழக்கமாகப் பிரயாணம் செய்பவர்கள், பலத்த ஏமாற்றத்திற்குள்ளாகி வருகிருர்களென்று தெரியவருகிறது.

யாழ்ப்பாணப்புகையிரத நிலயத்திலிருந்து மாலை 6 மணிக்கு புறப்படும் புகையிரதம், சில நாட்களில் 5-50 அல்லது 5-55 மணிக்கு புறப்பட்டுவிடுவதாகவும், இரண்டு நாட்கள் தான் இப்படி ஏமாற்றமடைந்துவிட்டதாகவும், வழக்கமாக பிரயாணம் செய்யும் பிரயாணி ஒருவர் தெரிவித்தார்.

'சீஸன் டிக்கட்' வைத்திருக்கும் அந்தப்பிரயாணி, பெரிய கடையிலிருந்து சில சாமான்களைச்சுமந்துகொண்டு சரியாக 5-55 மணிக்கு, புகையிரத நிலயத்திற்குவந்து நேரத்தைப் பார்த்துவிட்டு, காத்திருந்ததாகவும் 6-10 ஆகியும், அவர் போகவேண்டிய புகையிரதத்தைக் காணுது, புகையிரத நிலய அதிகாரி ஒருவரை விசாரித்தபோது, அந்த புகையிரதம் ஏற்கனவே சென்றுவிட்டதாக அவர் தெரிவித்ததாகவும், அதன்பின் அவர் திரும்பவும் பஸ்நிலயத்திற்கு நடந்துசென்று பஸ்ஸில் சென்றதாகவும் அந்தப் பிரயாணி தெரிவித்தார்.

உத்தியோகஸ்தர்களும், பாடசாலை மாணவர்களும் பிரயாணம் செய்யும், பளையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் புகையிரதமும், சில நாட்களில், நேரத்துக்கு முந்தி புகையிரத நிலயத்தைவிட்டுப் புறப்படுவிடுவதாகத் தெரியவருகிறது. இதனல் வீட்டிலிருந்து புகையிரத நிலயத்திற்கு ஓடவேண்டியநிலை ஏற்படுவதாகவும், சில நாட்களில், ஓடியும் பயனில்லாமல் போய்விடுகிறதென்றும் மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

இதையிட்டு சில புகையிரத நிலைய அதிகாரிகளுக்கு புகார் செய்யபபட்டுள்ளதாகத்தெரிய வருகிறது.

---

## ஆஸ்பத்திரிகளில் திருட்டு

கொழும்பு, வியாழன்

ஆஸ்பத்திரிகளில் உள்ள வைத்திய உபகரணங்களும், கருவிகளும் அடிக்கடி திருட்டுப்போவதாக மாகாணங்களில் உள்ள ஆஸ்பத்திரிப் பொறுப்பதிகாரிகளும், சுகாதார இலாகா சுபரின்டன்மார்களும் சுகாதார இலாகாவிற்கு அறிவித்துள்ளனர். ஆஸ்பத்திரிகளிலிருந்து பலவித கருவிகளும், உபகரணங்களும், பொருள்களும் களவாடப்படுவதாக இலாகாவிலிருந்துதெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிகளில் இவ்விதம் நடைபெற்றுவரும் திருட்டுக்கள்பற்றிக் கவனிப்பதற்காக சுகாதர மந்திரி ஆஸ்பத்திரிகளுக்கு விஜயம் செய்யவிருக்கிருர். ஆஸ்பத்திரி ஊழியர்களும், ஆஸ்பத்திரிக்கு நோயாளரைப் பார்வையிடச் செல்பவர்களும் சேர்ந்தே இவ்வித வேலைகளில் ஈடுபட்டுவருவதாக நம்பப்படுகிறது.

---

## பத்து பிள்ளைகளின் தாயார் தற்கொலை

குண்டசாலை, புதன்

பத்துக் குழந்தைகளுக்குத் தாயாகிய புஞ்சிகுமாரி நச்சுத்திராவகம் அருந்தி மரணமானர்.

உடுநுவரயைச் சேர்ந்த 27 வயதான சகுந்தலா என்னும் பெண்ணும் நச்சுத்திராவகம் அருந்து மரணமானர். இவருக்கு மூன்று பிள்ளைகள் உண்டு.

தற்கொலை காரணமாக மரணம் சம்பவித்ததாக தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அறிமுக அட்டை

கொழும்பு, வியாழன்

இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஜி. ஸி. ஈ. சாதாரண பரீட்சைக்கு சகல மாணவர்களும் தம்முடைய அறிமுக அட்டைகளை கொண்டு செல்லவேண்டி நேரிடலாம் என நம்பப்படுகிறது. இதுவரை காலமும் தனிப்பட்டபரீட்சார்த்திகளே அறிமுக அட்டையை பரீட்சை மண்டபத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டுமென விதிக்கப்பட்டிருந்தது. இனிமேல் பாடசாலை மாணவர்களும் அறிமுகஅட்டை கொண்டுசெல்ல வேண்டும்.

பாடசாலை மாணவர்களில் பலர் ஒருவர் பேரில் மற்றவர் பரீட்சைக்குத் தோற்றுவது அதிகரித்து வருவதாகவும் அதைத் தடைசெய்வதற்கு இதுதான் உகந்த வழி என்றும் பரீட்சைக் கமிஷனர் திரு. என். ஈ. ஆர். பேரின்பநாயகம் தெரிவித்தார்.

---

## நகைத்தொழிலாளர் கால்நடை ஊர்வலம்

சென்னை, மே 23

இரண்டாயிரம் நகைத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டின் பலபாகங்களிலிருந்தும் சென்னைக்கு நடந்துவந்து நேருவிடம் ஒரு மகஜர் கொடுப்பார்கள் என தென்னக அணிகல தொழிலாளர் சங்க செயலாளர் திரு. ந. சேதுராசன் தெரிவித்துள்ளார்.

ஜூன்மாதம் 12-ம் திகதி பாரதப்பிரதமர் நேரு சென்னை வரவிருக்கிருர். நகைத்தொழிலாளர்களின் மிகப்பெரிய ஒரு ஊர்வலம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. இந்த ஊர்வலத்தில் சுமார் பத்தாயிரம் நகைத்தொழிலாளர் கலந்துகொள்வார்களென்றும் தெரியவருகிறது.

---

## கிராமசபை அலுவலக திறப்புவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

பதினைந்து ஆண்டுகளாக உரும்பிராயில் இருந்துவந்த நீர்வேலி கிராமசபை அலுவலகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் உத்தரவுப்படி வழமையான அலுவலகமாகிய நீர்வேலி கிராமசபைக் கட்டிடம் கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

திரு. வி. பி. கணேசபிள்ளை கிராமசபை அலுவலகத்தைத் திறந்துவைத்தார். கிராமசபைத் தலைவர் திரு இ அப்புத்துரையும் பேசினர்.

---

## இடமாற்றம்

பருத்தித்துறை, புதன்

கொழும்பு சுங்க இலாகவைச் சேர்ந்த திரு. வீ. கந்தையா, பருத்தித்துறை சுங்க இலாகா சிருப்பராக, கடமையேற்றுள்ளார். பருத்தித்துறையில் இதுவரை சுங்க இலாகாவில் கடமையாற்றிய திரு. ஏ. பொன்னையா கொழும்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார.

---

## பூங்காவில் குழந்தையின் தலை

நாவலப்பிட்டி, வியாழன்

நாவலப்பிட்டியைச் சேர்ந்த ஜயத்திலகா பூங்காவில் ஒரு குழந்தையின் தலை மட்டும் காணப்பட்டது. இந்த மர்மம் எப்படி நிகழ்ந்திருக்கலாம் என்பதையிட்டு பொலிசார் புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# "தமிழை வாழவைத்தல் தமிழ் மக்கள் கடமை"

கொழும்பு, புதன்

கொழும்பு விவேகானந்த சபையில் எழுத்தாளர் மன்றம் 'தமிழ் மொழியின் வாழ்வில் எழுத்தாளர் கடமை' என்னும் பொருள்பற்றிக் கருத்தரங்கமொன்றினை நடத்தியது. இக்கருத்தரங்கத்திற்குத் தலைமை வகித்த பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமது உரையில் கூறியதாவது:

"உலகத்து மக்கள் யாவருடைய வாழ்வுக்கும் வாழும் நாடும் பேசும் மொழியும் இன்றியமையாதன. நாட்டுரிமை பெற்ற பின்னரும் நாட்டிலுள்ள வெவ்வேறு மொழிகளைப் பேசுவோர் தத்தம் மொழிகளைக் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாக்கின்றனர். அவற்றை வளர்த்து வளப்படுத்துகின்றனர். ஒரு மொழியின் வாழ்வும் வளமும் அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோரின் மொழிப்பற்றையும் அவர்களின் ஆட்சியுரிமையையும் பெறுத்தேயுள

தமிழ் வாழ வேண்டுமெனின் அது ஆட்சி மொழியாகவும் இருக்கவேண்டும். அதனைப் பேசும் மக்கள் யாவரும் எல்லாத துறையிலும் அதனைப் பயன் படுத்தவேண்டும்.

தமிழை வாழ்வின் துறைகளில் எல்லாம் தமிழ்ப்பேரறிஞர்களில் எத்தனைபேர் பயன்படுத்துகிறார்கள். தமிழிலே எழுதிய கடிதத்தில் ஆங்கிலத்தில் கையெழுத்திடும் தமிழ்ப் பண்டிதர்களும் எம்மிடையேயுளர் எனின் தமிழை இவர்கள் எப்படி வாழவைப்பார்கள்? தமிழை வாழவைத்தல் தங்கள் முதற்கடமை என்று எண்ணி அதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து மேற்கொள்ளாமையே இதற்குக் காரணம். இந்தச் சோர்வையும் மறதியையும் நீக்கித் தமிழை எல்லாத்துறைகளிலும் வாழவைக்க வேண்டும்."

மற்றும் பலர் இக்கருத்தரங்கில் பேசினர்.

---

## பல்கலைக்கழக அனுமதிக்கு பொதுவான பரீட்சை?

கொழும்பு, புதன்

மூன்று பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான அனுமதிப் பரீட்சை நடத்துவது பற்றி நேற்று கூடிய பரிசீலனைக் கமிட்டி ஆலோசித்தது. இப்பொழுது ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் நடாத்தப்படும் வெவ்வேறு பரீட்சைகளை இணைத்து ஒரு பொதுப் பரீட்சையாக நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

லண்டன் உயர்தர ஜி.சி.ஈ. பரீட்சைக்குப் பதிலாக வேறு பரீட்சையை எவ்விதம் நடத்தலாம் என்பது பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறும் பொருட்டு இக்கமிட்டி நிறுவப்பட்டது. நேற்றைக்கு நடைபெற்ற இக்கூட்டத்திற்கு மூன்று பல்கலைக்கழகத்தின் சார்பில் பிரதிநிதிகளும், பரீட்சைக் கமிஷனர் கமிட்டியின் தலைவர், திரு. எம்.ஜே. பெரேரா ஆகியோரும் கூட்டத்திற்கு பிரசன்னமாயிருந்தார்கள். பல்கலைக்கழகத்துக்கு அனுமதிப் பரீட்சை எடுப்பவர்கள் தொகை அதிகரித்துள்ளதால் ஒரே பரீட்சை நடத்துவது நல்லதென அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

---

## அம்பலாங்கொடையில் பலத்த மழை

அம்பலாங்கொடை, புதன்

இங்கு 15 மணித்தியாலங்களாக தொடர்ந்து பெய்த பலத்த மழையின் காரணமாக களுவதுமுல்லை, பொல்வத்த, போறம்ப, பனியாய, மகா அம்பலாங்கொட ஆகிய இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இவ்விடங்களில் தண்ணீர் 3 அடி உயரத்திற்கு வந்துள்ளது.

திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமான மழை நள்ளிரவுவரை தொடர்ந்து பெய்தது. நகரத்துலுள்ள அனேக பதைகள் வெள்ளத்தினால் தடைபட்டுள்ளன. புகையிரதப்பாதைகளும் சுமார் அரை மைல் தூரத்திற்கு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. புகையிரத அதிகாரிகள் பாதிக்கப்பட்ட இடங்களை திருத்துவதற்கு விரைந்து சென்றுள்ளார்கள். புகையிரதப் போக்குவரத்து மட்டுமின்றி தபால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

அக்குரால என்னும் இடத்தில், மாதம்பைக்கும், பெரலியாவிற்கும் இடையில், கரையோரப்பகுதியில் கடல்பெருக்கு ஏற்பட்டுள்ளது. காலி வீதியில் அம்பலாங்கொடையிலிருந்து இரண்டு மைல் தூரத்திற்கு கடல்நீர் புகுந்ததால் பல குடிசைகள் சேதமடைந்துள்ளன.

---

## ஆனந்தனுக்கு திருமலையில் வரவேற்பு

யாழ்ப்பாணம், வியாழன்

நீச்சல் வீரர் ஆனந்தனுக்கு திருக்கோணமலை நகர சபை பொது வரவேற்பொன்றை அளிக்க தீர்மானித்துள்ளது.

அடுத்த மாதம் 8-ம் திகதி ஆனந்தனுக்கு இந்த வரவேற்பளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

# வானொலி நிகழ்ச்சிகள்

## வெள்ளி 24-5-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 கே. மாணிக்கவாசகர் — பக்திப்பாடல்கள், 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 காமன்வெல்த்தின் இசைச்சித்திரம்.

இரவு 7-00 ஞானாஞ்சலி, 7-30 நேயர்விருப்பம். 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 ஆர். கோவிந்தராஜா பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 திருவாரூர் கே. செல்விகணபதி நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர் களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 குரல்இசை, 1-50 வாத்திய இசை, 2-10 எஸ். கே. சுமதி — பாட்டு.

மாலை 5-15 திருவாரூர் கே. செல்வகணபதி — நாகஸ்வரம், 5-45 காந்தி அஞ்சலி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பொங்கியெழும் பாரதம் — சித்திரல், 7-45 டி. கே. ரங்காச்சாரி — பாட்டு. 9-15 பலகணி, 9-30 மெல்லிசை, 9-45 இசைமாலை.

---

## நியமனத்தில் தாமதம்

மிருசுவில், புதன்

மிருசுவில் உப தபாற்கந்தோர் அதிபராக பெண்களைத் தெரிவு செய்யவேண்டாமென்றும், அப்பகுதியிலிருந்து விண்ணப்பித்தவர்களில் ஒருவரையே, அப்பதவிக்கு நியமிக்கும்படியும் பொதுமக்கள் தபால் இலாகா தலைமைக் காரியாலயத்திற்கு மகஜர் அனுப்பியிருப்பதாக அறியப்படுகிறது.

மிருசுவில் உபதபாற் கந்தோருக்கு ஒரு உப அதிபரை நியமிக்கும் பொருட்டு கடந்த வருடம் டிசம்பர் மாதம், பரீட்சையும், நேர்முக பரீட்சையும் நடைபெற்றது.

இப்பரீட்சைக்கு சில பெண்கள் உட்பட 25 பேர் தோற்றினார்.

கடந்த ஒரு வருட காலமாக மிருசுவில் உப தபாற்கந்தோரில், உதவி உபதபாற்கந்தோர் அதிபராக ஒருவர் கடமையாற்றி வருகிறார் என்று தெரியவருகிறது.

நேர்முகப் பரீட்சை நடந்து ஆறுமாதகாலமாகியும் ஒரு முடிவும் இன்னும் வெளிவரவில்லை.

அரசியல் தலையீடு காரணமாகவே நியமனத்தில் தாமதம் ஏற்படுவதாகவும், இந்தத் தபால் நிலையத்தைப் பற்றியும், புதிய உபதபால் அதிபர் தெரிவைப் பற்றியும், மேலிடத்திற்கு பொதுமக்களால் பல மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

மிருசுவில் உபதபாற் கந்தோரைப் பற்றி எதுவித முடிவும் தங்களுக்கு கிடைக்கவில்லையென்றும், எதற்காக மாதக்கணக்கில் தாமதமாகிறதென்று தங்களுக்குத் தெரியவில்லையென்றும், வடபகுதி தபாற்கந்தோர் தலைமை நிலையத்தில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நிரந்தரமாக உபதபாற்கந்தோர் அதிபர் ஒருவரை கூடிய விரைவில் நியமிக்க நடவடிக்கை எடுக்கும்படி அப்பகுதி எம். பி.யைக் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

---

## குடிசனமதிப்பு மேற்பார்வையாளர்

மாவிட்டபுரம், புதன்

பருத்தித்துறை மாஜிஸ்ரேட் கோர்ட்டைச் சேர்ந்த திரு. எஸ். பாலசுப்பிரமணியத்தை நாகர்கோவில் பகுதிக்கு குடிசனமதிப்பு மேற்பார்வையாளராக வடமாராட்சி கரும அதிகாரி நியமித்துள்ளார்.

---

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

கோப்பாய், வியாழன்

இருபாலைச்சந்தி மத்திய சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர்களாகத் திருவாளர்கள் நா. அருளம்பலம், செ. சோமசுந்தரம், இ. கெங்காதரன், பெ. கணேசலிங்கம், அ. உலகநாதன்; தலைவர்: திரு. க. விஜயரத்தினம்; உபதலைவர்: திரு. ஆ சுப்பிரமணியம்; செயலாளர்: திரு. தி. ஜெயகுமாரன்; உபசெயலாளர்: திரு. அ. பாலசுப்பிரமணியம்; பொருளாளர். திரு. கு. சுவாமிநாதன்; கணக்குப் பரிசோதகர்கள்: திருவாளர்கள் சிவ. பாலசிங்கம், வீ. கனகராசா; நிலையப்பொறுப்பாளர்: திரு. கு.ஜெயபாலன்; நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

---

கொழும்பு, புதன்

இன்று அதிகாலை பெய்த கடும் மழை காரணமாக கிருண்ட்பாஸிலுள்ள ஒரு பாடசாலை விடுதிக கட்டடத்தின் சுவர்கள் இடிந்து விழுந்தன இந்த விடுதிக்குள் நித்திரை செய்த 25 பேர் தெய்வாதினமாக உயிர் தப்பினர்.





கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/118

## தேநீர்க்கடை பிரவேசம் பின்போடப்படும்

யாழ்ப்பாணம், வியாழன்
வடபகுதியில் மக்கள் முன்னேற்ற மன்றம் மேற்கொண்டு நடத்த விருந்த தேநீர்கடைப் பிரவேசம் பின் போடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மானிப்பாயில் நடைபெற்ற தேநீர்க்கடை பிரவேசத்தின் போது தோன்றிய எதிர்ப்புகள் சம்பந்தமாக வழக்கு வைப்பதா, இல்லையா என்ற முடிவு செய்யப்படும்வரை இந்த இயக்கம் நடத்தப்பட மாட்டாது என்று தெரிகிறது.

மானிப்பாயில் தேநீர்க் கடை பிரவேசம் நடத்தப்பட்ட போது இந்த இயக்கத்திற்கு மூன்று கடை உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இது சம்பந்தமாக தேநீர்க்கடைப் பிரவேசத்தை நடத்திய மக்கள் முன்னேற்ற மன்றத்தினர் 1956-ம் ஆண்டு 21-ம் இலக்கச் சட்டத்தின் கீழ் கடைக்காரர் மீது வழக்குத் தொடர முடிவு செய்திருந்தனர். ஆனல் உடுவில் எம். பி.யும், மானிப்பாய் கிராம சபைத் தலைவரும் சமாதான முயற்சியிலீடுபட்டதனல் வழக்கு வைக்கும் யோசனை பின்போடப்பட்டுவந்தது. இன்னும் சரியான முடிவு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

எனவே இம் முடிவு தெரிந்த பின்புதான் தேநீர்க் கடைப்பிரவேச இயக்கம் சாவகச்சேரி வட்டுக்கோட்டை ஆகிய இடங்களுக்கு விஸ்தரிக்கப்படுமெனத் தெரிகிறது.

---

## மரணமா தற்கொலையா?

யாழ்ப்பாணம், வியாழன்
நாச்சிமார் கோவிலைச்சேர்ந்த (45) வயது சி. நடராசா பத்தர் டாக்டர் சுப்பிரமணியம் பூங்காவின் பிற்பகுதியிலுள்ள சிமெந்து கட்டு ஆசனத்தின் மேல் படுத்த நிலையில் நேற்றுக் காலை இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

திரு நடராசா தமது மனைவியைவிட்டுப் பிரிந்து சென்ற ஒன்றரை மாதகாலமாக வாழ்ந்தாரென்றும் அக்கவலையினலே நஞ்சருந்தித் தற்கொலை புரிந்துள்ளார் என்றும் சொல்லப்படுகிறது.

யாழ்ப்பாணம் பொலிசார் புலன் விசாரணை நடத்துகின்றனர்.

## மூன்று கோரிக்கைகள்

கொழும்பு, புதன்
தனது முக்கியமான மூன்று கோரிக்கைகளையும் பெறும் பொருட்டு இம்மாத இறுதியில் நாடு பூராவுமான இயக்க மொன்றை நடாத்த ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கமயா ஒழுங்குகள் செய்துள்ளது.

ஆங்கில தரமுடைய ஆசிரியர்களுக்கும் போதனு மொழி ஆசிரியர்களுக்கும் ஒரே முறையான சம்பளம்; தேசிய கல்வி கமிஷனின் சிபார்சுகளை அமுல் செய்தல்; ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவது ஆகிய மூன்று கோரிக்கைகளையும் பெறும் பொருட்டே மேற்கூறிய சங்கம் ஒரு இயக்கமொன்றை ஆரம்பிக்கும்.

---

## இந்திய தேயிலை உற்பத்தி

புதுடில்லி, மே 22
இந்திய தேயிலைத் தொழிலின் மூலதனம் 71 கோடி ரூபாய் என்றும், 10 லட்சம் பேர் இதன் மூலம் பிழைப்பு நடத்துகிருர்கள என்றும் அறிவிக்கப்படுகிறது. 40 சத விகித மானேர் உள்நாட்டில் தேயிலையை உபயோகிக்கிருர்கள். உலகிலேயே அதிக தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடு இந்தியாதான் என்றும், இந்தோனேஷியா அடுத்த ஸ்தானம் வகிப்பதாகவும், ஆபிரிக்காவும், இலங்கையுமே அதற்கு கடும் போட்டியாய் இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. 3-ம் ஐந்தாண்டுத்தின் கீழ் வருடம் 61 கோடி ரூத்தல் ஏற்றுமதி செய்யப்படவிருக்கிறது.

# ‘சர்வாதிகார ஆட்சிக்கு இங்கு இடமில்லை!’

# அரசாங்க பார்லிமெண்டரிக் குழு கூட்டத்தில் பிரதமர் அறிவிப்பு

## ‘புதிய பட்ஜட் சாதாரண மக்களைப் பாதிக்காது’

—நிதிமந்திரி

கொழும்பு, புதன்
“ஒரு ஜனநாயக நாட்டில் சர்வாதிகார ஆட்சிக்கு இடமில்லை. அப்படியொரு சர்வாதிகார ஆட்சி இடம் பெறுவதையும் நாம் விரும்பவில்லை. காலம் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கைகளைத்தான் எமது அரசாங்கம் கடைப்பிடித்து வருகிறது.” என்று இன்று நடைபெற்ற அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பேசுகையில் கூறினர்.

### ‘சபையிலிருந்து நீக்குக’

அரசாங்க பார்லிமெண்டரி குழுவின் கூட்டம் இன்று அலரி மாளிகையில் நடைபெற்றது. சர்வாதிகார ஆட்சி பற்றிய வதந்திகள் குறித்து கட்சி அங்கத்தினர்கள் பிரதமரைச் கேட்ட பொழுதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினர்.

சர்வாதிகார ஆட்சி பற்றிய வதந்தி குறித்து மாத்தறையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பதிலளித்திருந்தார் என்றும் ஆனல் மந்திரி மகாநாமசமரவீரா ஒரு கூட்டத்தில் சர்வாதிகார ஆட்சி பற்றி பேசியிருக்கிருர் என்றும் இப்படியான கருத்தையுடைய மந்திரியை மந்திரி சபையில் வைத்திருக்கக் கூடாதென்றும் பதவியிலிருந்தும் நீக்க வேண்டும் என்றும் அங்கத்தினர்கள் பிரதமரைக் கேட்டுக்கொண்டனர்.

### எதிர்பார்த்தது இடம்பெறவில்லை

அரசாங்க பார்லிமெண்டரி குழுவின் கூட்டம் அலரிமாளிகையில் அமைதியான முறையில் நடைபெற்றது. காசாரமான விவாதத்துக்கு எதிர்பார்க்கப்பட்ட உதவி மந்திரி திரு. டி. பி. தென்னக்கூனின் பிரேரணை இன்று நடைபெற்ற கூட்டத்தில் எடுத்துக் கொள்ளபபடவில்லை.

அடுத்த இரண்டரை வருட காலத்தில் அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் வேலைத் திட்டங்கள் குறித்து, அங்கத்தினர்களுக்கு பிரதமர் விளக்கமாக எடுத்துச் கூறினர். நிதி நெருக்கடி காரணமாக வேலைத்திடடங்கள் நிறைவேற்றப்படாமலிருக்கின்றன என்றும் காலக்கிரமத்தில் இவை யாவும் நிறைவேறும் என்றும் பிரதமர் கூறினர்.

### அரிசிவிலை உயராது

நிதிமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல பேசுகையில் சமீபத்தில் வெளியாகவிருக்கும் பட்ஜட், சாதாரண மக்களைப் பாதிக்காது எனத் தாம் உறுதியளிப்பதாகக் கூறினர். அரிசி விலை உயரும் என்ற வதந்தி நாட்டில் பரவியிருந்தபோதிலும், அரிசியின் விலை உயர மாட்டாது என்றும் நிதி மந்திரி உறுதி கூறினர்.

### ஜோர்ஜ்ராஜபக்ஷ பகிஷ்காரம்

இன்று நடைபெற்ற அரசாங்க பார்லிமெண்டரிக் கூட்டத்துக்கு ஹக்மன எம். பி. யும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவருமான திரு. ஜோர்ஜ் ராஜபக்ஷாசமுகமளிக்கவில்லை. உப சபாநாயகர் திரு. ஹியு பெர்னண்டோவும் இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

பௌத்தர்களுக்கு எதிராக வியட்னும் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை காரணமாக இலங்கை அரசாங்கம் உடனடியான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று திரு. ஜோர்ஜ் ராஜபக்ஷா விடுத்த கோரிக்கைக்கு பிரதமர் பதிலளிக்காத காரணத்தினல்தான் அவர் இன்றைய கூட்டத்திற்குச் சமுகமளிக்கவில்லை. திரு. ஜோர்ஜ் ராஜபக்ஷாவின் கோரிக்கை குறித்து திரு. மொல்லிகொட எம். பி. தெரிவிக்கையில், இதர நாடுகளிலும் இப்படியான சம்பவங்கள் நிகழ்கிறதென்றும், வியட்நாமில் நடைபெற்ற சம்பவங்கள்பற்றி குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லையென்றும் கூறினர்.

### அலரிமாளிகை விருந்தில் யாழ். எம். பி.

மொழி உபயோகம் சம்பந்தமாக இன்றைய கூட்டத்தில் எதுவும் விவாதிக்கப்படவில்லை. அலரி மாளிகையில் நடைபெற்ற அரசாங்க பார்லிமெண்டரி குழுவின் கூட்டத்தைத் தொடர்ந்து இரவு விருந்தொன்றும் இடம் பெற்றது. அலரிமாளிகையில் நடைபெற்ற இரவு விருந்தில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவும் கலந்து கொண்டார்.

---

## பேய்மழை! 400 பேர் வீடு இழந்தனர்

கொழும்பு, புதன்
சுமார் 80 குடும்பங்கள் வரை பலத்த மழை காரணமாக குப்பியாவத்தை கிழக்கு வட்டாரத்தில் வீடிழந்துள்ளார்கள். 400 பேருக்கு அதிகமானேர் இந்த 80 குடும்பங்களிலும் இருக்கிருர்கள்.

கொழும்பு நகரசபையைச் சேர்ந்த பொது சேவைப் பகுதியினர், வீடிழந்தவர்களுக்கு உதவி செய்வதில் ஈடுபட்டுள்ளார்கள். தற்பொழுது அவர்கள் தெமட்டக்கொடையில் ஒரு மண்டபத்தில் தங்கியுள்ளார்கள்.

---

## திருநெல்வேலி சிவன்கோவில் பூங்காவனம்

யாழ்ப்பாணம், வியாழன்
திருநெல்வேலிச் சிவன்கோவில் பூங்காவன உற்சவம் வெள்ளிக்கிழமை நடத்தப்படவிருக்கின்றது. 7 வருட காலத்தின் பின் இவ்வருடமே இவ்வாலய உற்சவம் நடைபெறுகின்றது வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் பூங்காவன உற்சவத்தில் இசைநடன, சங்கீத நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன.

## ‘ஆசிரியர் லீவு குறைக்கப்பட வேண்டும்’

### கல்வி மந்திரி சிபார்சு

கொழும்பு, புதன்
ஆசிரியர்களின் லீவு குறைக்கப்படல் வேண்டுமென்று அரசாங்கத்துக்கு சிபார்சு செய்வதென கல்வி மந்திரி ஜனப் பதியுதீன் மாமூத் முடிவு செய்துள்ளார். ஆசிரியர்களுக்கு சம்பளத்துடன் வழங்கப்படும் விடுமுறை லீவு, பத்து நாட்களுக்குக் குறைக்கப்படல் வேண்டும் என்று கல்வி மந்திரி அரசாங்கத்துக்கு சிபார்சு செய்யவிருக்கிருர். தற்பொழுது ஆசிரியர்களுக்கு 21 லீவு நாட்கள் உண்டு.

இது சம்பந்தமாக கல்வி இலாகாவைச் சேர்ந்த அதிகாரி தெரிவிக்கையில், தற்பொழுது ஆசிரியர்கள், ஒவ்வொருவருடத்திலும் ஆறு மாத லீவு பெறுகிருர்கள் என்று கூறினர்.

---

## பாம்பு கடித்து மரணம்

யாழ்ப்பாணம், புதன்
முரசு மோட்டையைச் சேர்ந்த ஐயாத்துரை (38) என்பவர் பாம்பு தீண்டியமையால் மரணமானர். விவசாயியான இவரைப் புடையன் பாம்பு கடித்ததாகச் சொல்லப் படுகிறது.

---

## சந்தேகநபர் சரணடைந்தார்

மாவிட்டபுரம், புதன்
அராலி மேற்கைச் சேர்ந்த முருகேசு வீரசிங்கம் என்பவர் வெட்டுக்காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானதையொட்டி சங்கானைப் பொலிஸாரால் தேடப்பட்டுவந்த சந்தேக நபரான வேலுப்பிள்ளை குமாரசாமி மல்லாகம் நீதிபதி திரு. வெல்லி. டி. தாமோதரம் முன்னிலையில் சரணடைந்தார். நீதிபதி சந்தேக நபரை அடுத்த மாதம் 3-ம் திகதி வரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு மேல் விசாரணையை அதே தினத்துக்கு ஒத்திவைத்தார்.

---

## ஆஸி ராணுவ பலம் அதிகரிப்பு

கான்பரா, மே 22
ஆஸ்திரேலியா தன் ராணுவ பலத்தை அதிகரிக்கவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.


வெற்றிகரமான 4-வது வாரம்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஒடி வெற்றியீட்டிய திரைக்காவியம்!

கிங்ஸ்லி (கொழும்பு) ரீகாஸ் (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) மொடர்ன் (பண்டாரவளை) லக்ஷ்மி (இரத்தினபுரி) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

★ மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்
★ பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை!



சிவாஜி கணேசன்
S. S. ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி
ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
வி. நாகையா
எம். வி. ராஜம்மா
பி. எஸ். வீரப்பா
புஷ்பலதா
நடித்த

பி. எஸ். வி. பிக்சர்ஸ்

ஆலய மணி

டைரக்ஷன் கே. சங்கர்

இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

மனோகரா (யாழ்ப்பாணம்)

கே. பாலாஜி
அஞ்சலிதேவி
நடித்த

நாகநந்தினி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மே மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.